“நமது லட்சியம் உயர்வானது!
நமது பார்வை தெளிவானது!
நமது வெற்றி முடிவானது!”

**செல்வி ஜெ ஜெயலலிதா**
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

©
தமிழ்நாடு அரசு
2015

- அம்மா உணவகம்
- அம்மா உப்பு
- அம்மா குடிநீர்
- அம்மா சிமெண்ட்
- அம்மா மருந்தகம்
- அம்மா திட்டம்
- தாலிக்குத் தங்கம்
- விலையில்லா அரிசி
- விலையில்லா ஆடுகள், கறவை மாடுகள்
- முதலமைச்சரின் பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம்
- தொட்டில் குழந்தைகள் திட்டம்
- பசுமை வீடுகள் திட்டம்
- திருக்கோயில்களில் அன்னதானம்
- விலையில்லா மிதிவண்டிகள்
- விலையில்லா மடிக்கணினி
- விலையில்லா மின்விசிறி, மிக்சி, கிரைண்டர்
- முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீடு
- இ-சேவை மையங்கள்

மானியக் கோரிக்கை எண் 28
செய்தி மற்றும் விளம்பரம்

# கொள்கை விளக்கக் குறிப்பு 2015-2016



கே.டி.ராஜேந்திரபாலாஜி
செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள்
செயலாக்கத் துறை அமைச்சர்

## தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை

# மானியக் கோரிக்கை எண்: 28
# செய்தி மற்றும் விளம்பரம்
## பொருளடக்கம்


| வ. எண் | தலைப்பு | பக்கம் எண் |
|---|---|---|
| | முன்னுரை | 3 |
| 1. | செய்தி வெளியீட்டுப் பிரிவு | 6 |
| 2. | புகைப்படப் பிரிவு | 14 |
| 3. | மேற்கோள் பிரிவு | 15 |
| 4. | நினைவகங்கள் | 18 |
| 5. | அரசு விழாக்கள் | 33 |
| 6. | கள விளம்பரம் | 39 |
| 7. | விளம்பரம் | 42 |
| 8. | திரைப்பட விருதுகள், மானியம் மற்றும் சின்னத்திரை விருதுகள் | 45 |
| 9. | திரைப்படத்துறையினர் நலவாரியம் | 49 |
| 10. | தமிழ்நாடு திரைப்படப் பிரிவு | 53 |
| 11. | எம்ஜிஆர் அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனம் | 65 |
| 12. | திரைப்படம், வீடியோ மற்றும் கேபிள் தொலைக்காட்சி இணைப்பு | 70 |
| 13. | தமிழரசு | 76 |
| 14. | பொருட்காட்சிப் பிரிவு | 94 |
| 15. | மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்கள் | 101 |
| 16. | மாநிலச் செய்தி நிலையம் | 103 |
| | நிறைவுரை | 105 |

**“ மக்களால் நான்**
**மக்களுக்காக நான்”**

**– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்**
**புரட்சித்தலைவி அம்மா அவர்கள்**

## முன்னுரை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் சீரிய தலைமையிலான அரசு வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத தலைசிறந்த திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

கடந்த 2011 ஆம் ஆண்டு மே திங்களில் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள், தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற்று தமிழக மக்களுக்காக தன்னையே அர்ப்பணித்து ஏழை, எளியோர் வாழ்வில் முன்னேற்றம் காணவும், தமிழகம் முதல் நிலை எய்தவும், தீர்க்க நோக்குடன் தீட்டிச் செயல்படுத்தி வரும் இத்திட்டங்கள் குறித்து மக்களுக்கு எடுத்துச் சொல்லும் சீரிய பணியை,

**‘இதனை இதனால் இவன்முடிக்கும் என்றுஆய்ந்து**
**அதனை அவன்கண் விடல்’ (குறள்–517)**

என்று வள்ளுவர் காட்டிய வழிமுறைப்படி, செய்தி வெளியீட்டுப் பிரிவு, புகைப்படப் பிரிவு, மேற்கோள் பிரிவு, நினைவகங்கள் பிரிவு, விழாக்கள் பிரிவு, கள விளம்பரப் பிரிவு, விளம்பரப் பிரிவு, பொருட்காட்சிப் பிரிவு, தமிழ்நாடு திரைப்படப் பிரிவு, திரைப்படத்துறையினர் நலவாரியம், எம்ஜிஆர் அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனம், 'தமிழரசு' இதழ், செய்தி நிலையங்கள், மாவட்டங்களில் உள்ள செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்கள் ஆகிய அனைத்துப் பிரிவுகளின் வாயிலாக செய்தி – மக்கள் தொடர்புத் துறை செம்மையுடன் செயல்படுத்தி வருகிறது.

தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வரும் அனைத்து திட்டங்கள் குறித்து மக்கள் நன்கு அறிந்திடச் செய்திடும் வாய்ப்பாகவும், அத்திட்டங்களின் பயன்களை உரிமையுடன் அவர்கள் பெற்றிடும் வகையில் விழிப்புணர்வை அளித்திடும் வழிமுறையாகவும் செயல்பட்டு, அரசுக்கும், மக்களுக்கும் இடையே இணைப்புப் பாலமாக செய்தி மக்கள் தொடர்புத் துறை சிறப்புடன் இயங்கி வருகிறது.

**'கருமம் சிதையாமல் கண்ணோட வல்லார்க்கு**
**உரிமை உடைத்துஇவ் வுலகு'** **(குறள் – 578)**

என்று வள்ளுவப் பெருமான் எடுத்துக் காட்டியபடி, தன் பணி மக்களுக்குத் தொண்டு செய்து வாழ்வதே என்று, தான் கொண்ட கடமையில் வழுவாமல், மக்கள் நலன் ஒன்றே

எதனினும் முதன்மையானது என்னும் மக்கள் கண்ணோட்டம் கொண்டு, தமிழகத்தின் நலனை தம் உரிமையாகவும், தமிழக மக்களின் ஆதரவை தமது உடைமையாகவும் கொண்டுள்ள மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் தலைமையிலான அரசின் திட்டங்களையும், சாதனைகளையும் மக்களிடம் கொண்டு சேர்க்கும் சீரிய பணியை மிகுந்த ஆற்றலுடனும் அளவிலா உற்சாகத்துடனும் இத்துறை செய்து வருகிறது.

**“தொண்டு என்பது சுயநலமின்றி, பிறர் நலத்திற்காக உழைப்பது. அனைத்து மதங்களும் பிறருக்கு உதவுவதை போதிக்கின்றன”**

**– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்**
**புரட்சித்தலைவி அம்மா அவர்கள்**

## செய்தி வெளியீட்டுப் பிரிவு

செய்தி மக்கள் தொடர்புத் துறையில் உள்ள செய்தி வெளியீட்டுப் பிரிவு அனைத்து நாட்களிலும் 24 மணி நேரமும் இடையறாது செயல்பட்டு வரும் முக்கியப் பிரிவாகும்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மற்றும் அமைச்சர்களின் செய்தி வெளியீடுகள், செய்திக் குறிப்புகள், அறிவிப்புகள், நலத்திட்டங்கள், ஆக்கப் பணிகள், அரசின் சாதனைகள் குறித்த செய்திகள், அரசு சார்பில் நடைபெறும் நிகழ்ச்சிகளின் விவரங்கள், அவற்றின் தொடர்புடைய வண்ணப் புகைப்படங்கள் மற்றும் வீடியோ ஒளிப்பதிவுகள் ஆகியவற்றை நாளிதழ்கள், தொலைக்காட்சிகள், செய்தி முகமைகள், காலமுறை இதழ்கள் மற்றும் இணையதளச் செய்தி நிறுவனங்கள் என எண்ணற்ற ஊடகங்களுக்கு அனுப்பி, அரசின் அன்றாடச் செயல்பாடுகளை மக்கள் உடனுக்குடன் அறிந்து கொள்ளச் செய்யும் பணியினைச் செய்தி வெளியீட்டுப் பிரிவு மேற்கொண்டு வருகிறது.

மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் அமைச்சர்களால் அவ்வப்போது நடத்தப்படும் செய்தியாளர் கூட்டங்களுக்கு உடனுக்குடன் உரிய ஏற்பாடுகளையும் இப்பிரிவு செய்து வருகிறது. மேலும், அரசின் முக்கிய அறிவிப்புகளையும், செய்தி வெளியீடுகளையும், மாவட்டங்களில் உள்ள செய்தி ஊடகங்கள் உடனுக்குடன் அவற்றை வெளியிடும் வகையில் மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்களுக்கு மின்னஞ்சல் மூலம் அனுப்பி வைக்கிறது. மாண்புமிகு அமைச்சர்கள், துறைச் செயலாளர்கள், மாவட்ட ஆட்சியர்கள் கலந்து கொள்ளும் விழாக்கள், முக்கிய பிரமுகர்களின் வருகை ஆகியன குறித்து பத்திரிகையாளர்கள், தொலைக்காட்சியினர் செய்தி சேகரிக்கத் தேவையான உதவிகளையும் அதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் இப்பிரிவு செய்து வருகிறது.

மேலும், தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் நடைபெறும் அரசு விழாக்கள், மாண்புமிகு அமைச்சர்கள் கலந்து கொள்ளும் நிகழ்ச்சிகள் குறித்த தகவல்கள், புகைப்படங்கள், சம்பந்தப்பட்ட மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள் மூலம் தலைமையிடத்திலிருந்து வெளியாகும் பத்திரிகைகளில் இடம் பெறச்செய்யவும் மற்றும் வானொலி, தொலைக்காட்சிகளில் ஒலி/ஒளிபரப்பச் செய்தி வெளியீட்டுப் பிரிவு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

**பத்திரிகையாளர் நலன்**

**ஓய்வூதியம்**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, **20** ஆண்டுகள் பணியாற்றி ஓய்வுபெற்ற, நலிவுற்ற நிலையிலுள்ள பத்திரிகையாளர்களுக்கு, மாதாந்திர ஓய்வூதியம் ரூ.**6,000/–**லிருந்து ரூ.**7,500/–** ஆக கடந்த **07.10.2013** முதல் உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது. இதுவரை **122** பத்திரிகையாளர்களுக்கு உயர்த்தப்பட்ட ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது.

ஓய்வு பெற்ற பத்திரிகையாளர்கள் ஓய்வூதியம் பெற, பணிக்கொடை உச்ச வரம்புத் தகுதி ஒரு லட்சம் ரூபாயிலிருந்து இரண்டு லட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டது. பணியில் இருந்த போது பெற்ற பத்திரிகையாளர்களின் ஆண்டு வருமானத்திற்கான உச்ச வரம்பு தகுதி **1.20** லட்சம் ரூபாயிலிருந்து **2** இலட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டது.

**29.01.2015** அன்று நடைபெற்ற பத்திரிகையாளர் ஓய்வூதிய பரிசீலனைக் குழுக் கூட்டத்தில், **28** பத்திரிகையாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்க பரிந்துரை செய்யப்பட்டு, பத்திரிகையாளர் ஓய்வூதியம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**குடும்ப ஓய்வூதியம்**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், மறைந்த பத்திரிகையாளர்களின் குடும்ப நலனைக் கருத்தில்

கொண்டு, பத்திரிகையாளர் குடும்ப ஓய்வூதியத்தினை மாதம் ரூ.4,500/– ஆக உயர்த்தி வழங்க ஆணையிட்டார்கள். அதற்கிணங்க 07.10.2013 அன்று அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. தற்போது, உயர்த்தப்பட்ட குடும்ப ஓய்வூதியம், மறைந்த பத்திரிகையாளர்களின் குடும்பங்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

## குடும்ப உதவி நிதி

பத்திரிகைத் துறையில் ஆசிரியர், உதவி ஆசிரியர், நிருபர், புகைப்படக்காரர் மற்றும் பிழை திருத்துபவர் ஆகியோர் பணியில் இருக்கும்போது இயற்கை எய்தினால், அவர்களது குடும்பத்தினருக்கு முதலமைச்சர் பொதுநிவாரணநிதியிலிருந்து கீழ்க்கண்டவாறு குடும்ப உதவி நிதி வழங்கப்பட்டு வருகிறது :

| பணிபுரிந்த ஆண்டுகள் | குடும்ப உதவி நிதித் தொகை |
|---|---|
| 5 | ரூ. 50,000/– |
| 10 | ரூ. 1,00,000/– |
| 15 | ரூ. 1,50,000/– |
| 20 | ரூ. 2,00,000/– |

29.01.2015 அன்று நடைபெற்ற பத்திரிகையாளர் குடும்ப உதவி நிதி பரிந்துரை குழுக் கூட்டத்தில், 12 பத்திரிகையாளர்களின் வாரிசுதாரர்களுக்கு குடும்ப உதவி நிதி வழங்க பரிந்துரை செய்யப்பட்டு, நிதியுதவிகள் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## நல நிதியம்

பத்திரிகையாளர் நல நிதியத்திற்கு ஒரு கோடி ரூபாய் நிதி தனியே ஒதுக்கப்பட்டு, தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தில் வைப்பீடு செய்யப்பட்டுள்ளது. பணிக்காலத்தில் பத்திரிகையாளர்கள் கடுமையான நோயினால் பாதிக்கப்பட்டு மருத்துவ சிகிச்சை மேற்கொள்ளும் போது அவர்களுக்கு மேற்படி வைப்பீட்டுத் தொகை வாயிலாகக் கிடைக்கும் வட்டித் தொகையிலிருந்து மருத்துவ நிதியுதவி அளிக்கப்படுகிறது. இத்தகைய நிதியுதவி அதிகபட்சமாக ரூ.50,000 வரை அளிக்கப்படும்.

## அரசு வாடகைக் குடியிருப்பு

பத்திரிகையாளர்களுக்குத் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் மூலம் சிறப்பு அடிப்படையில் அரசு வாடகைக் குடியிருப்புகள் ஒதுக்கப்பட்டு வருகின்றன.

## வீட்டுமனை வசதி

இத்திட்டத்தின் கீழ், மாவட்டங்களில் வருவாய்த்துறை மூலம் பத்திரிகையாளர்களுக்குச் சலுகை விலையில் வீட்டுமனைகள் வழங்கப்படுகின்றன.

## செய்தியாளர் அங்கீகார அட்டை

அரசு அமைத்துள்ள "செய்தியாளர் அங்கீகாரக் குழு"வின் பரிந்துரையின் பேரில் ஆண்டுதோறும் நாளிதழ்கள்/ தொலைக்காட்சிகள்/செய்தி நிறுவனங்களில் பணிபுரியும்

பத்திரிகையாளர்களுக்கு, செய்தியாளர் அங்கீகார அட்டை (Press Accreditation Card) வழங்கப்பட்டு வருகிறது. அரசின் அனைத்து நிகழ்ச்சிகள் மற்றும் விழாக்களில் கலந்து கொண்டு செய்தி சேகரிக்க செய்தியாளர்களுக்கு அங்கீகார அட்டை மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது.

## செய்தியாளர் அட்டை

காலமுறை இதழ்களில் பணியாற்றும் பத்திரிகையாளர்களுக்கு, ‘‘செய்தியாளர் அட்டை பரிந்துரைக் குழு’’வின் பரிந்துரையின் பேரில், செய்தியாளர் அட்டை (Press Pass) வழங்கப்பட்டு வருகிறது. இவை காலமுறை செய்தியாளர்களுக்கு முக்கிய இடங்களுக்குச் சென்று கட்டுரைகள், வரலாற்று விவரங்கள், செய்திகளின் பின்னணி ஆகியன குறித்து உண்மைத் தன்மையை அறிந்து செய்தி சேகரிக்க உதவியாக அமைகிறது.

## செய்தியாளர் இலவசப் பேருந்துப் பயண அட்டை

செய்தியாளர் அங்கீகார அட்டை வழங்கப் பெற்ற பத்திரிகையாளர்கள், செய்தி சேகரிப்பதற்கு வசதியாக அவர்கள் விடுக்கும் வேண்டுகோளின் அடிப்படையில் அரசுப் பேருந்துகளில் பயணம் செய்ய ஓராண்டு காலத்திற்குச் செல்லத்தக்க இலவசப் பேருந்துப் பயண அட்டை ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்படுகிறது. இலவசப் பேருந்துப் பயண அட்டைகள் வழங்கும் வகையில் தமிழ்நாடு முழுவதும் இதற்கான தொகையைப் போக்குவரத்து நிறுவனங்களுக்கு இத்துறை ஈடுசெய்கிறது.

## செய்தி முகமைகள்

பி டி ஐ (Press Trust of India) மற்றும் யு என் ஐ (United News of India) ஆகிய இரண்டு செய்தி முகமைகள் வெளியிடும் செய்திகள் கீழ்க்காணும் இடங்களில் கணினி மூலம் 24 மணிநேரமும், ஆண்டு முழுவதும் பெறப்படுகிறது :

(அ) மேதகு ஆளுநர் மாளிகை

(ஆ) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இல்லம்

(இ) செய்தி வெளியீட்டுப் பிரிவு, தலைமைச் செயலகம்

நாடு முழுவதிலிருந்தும் தகவல்கள் பெறப்படுகின்றன. மிக முக்கியமான செய்திகள் தொடர்பாகத் தேவையான நடவடிக்கை எடுக்கும் பொருட்டு அவை உரிய அரசு அலுவலர்களின் கவனத்திற்குக் கொண்டு வரப்படுகின்றன.

## ஊடக மையம்

தலைமைச் செயலகத்தில் உள்ள ஊடக மையம் அல்லும் பகலுமாகச் (24 x 7) செயல்பட்டு வரும் முக்கிய ஊடக மையம் ஆகும். தலைமைச் செயலகத்திற்கு வருகை தருகின்ற பல்வேறு ஊடகங்களைச் சார்ந்த செய்தியாளர்கள் தங்களுக்கு வழங்கப்பட்ட செய்திகள் மற்றும் புகைப்படங்களை உடனுக்குடன் தங்களது நிறுவனத்திற்கு அனுப்புவதற்கு ஏற்ற வகையில் “ஊடக மையம்” அமைத்திட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டார்கள். அதன்படி ஊடக மையம்

அமைக்கப்பட்டுள்ளது. செய்திகள், புகைப்படங்கள், வீடியோ, துண்டுப்படங்கள் ஆகியவை செய்தி மக்கள் தொடர்புத் துறையின் www.tndipr.gov.in என்ற இணையதளத்தில் உடனுக்குடன் பதிவேற்றம் செய்யப்படுகின்றன.

செய்தி வெளியீடுகளில் செய்திக்குறிப்புகள், புகைப்படங்கள், தலைமையிடத்தில் (தலைமைச் செயலகத்தில்) வெளியிடப்படும் அதே சமயம், அவை அனைத்தும் ஊடக மையத்திலிருந்து, அனைத்து மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்களுக்கும் அனுப்பி வைக்கப்படுகின்றன. அவை, அந்தந்த மாவட்டங்களில் வெளியாகும் பத்திரிகைகள் / ஊடகங்கள் வாயிலாக வெளியிடப்படுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இவ்வாறாக, அரசின் திட்டங்கள் மற்றும் சாதனைகளை, மாநிலத்தின் கடைக்கோடியில் உள்ளவர்களுக்கும் விளம்பரப்படுத்த முடிகிறது. மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள் மேற்கண்ட செய்திகள் வெளியானது குறித்த விவரங்களை, ஒவ்வொரு நாளும், தலைமைச் செயலகத்திலுள்ள ஊடக மையத்திற்கு பதிவேற்றம் செய்கின்றனர்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடர்பான செய்தி வெளியீடுகள், செய்திக்குறிப்புகள் மற்றும் புகைப்படங்கள் மாவட்ட நாளிதழ்களில் வெளியான விவரங்கள் தொகுக்கப்பட்டு, அறிக்கை ஒவ்வொரு நாளும் அரசுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது. அரசின் செய்திகள் தமிழகம் முழுவதும் நாளிதழ்களில் வெளிவருவதில் ஊடக மையம் முக்கிய பங்கு வகிக்கின்றது.

**“விருப்பு வெறுப்பற்ற கருத்துகளே**
**வளர்ச்சிக்கு வழி வகுக்கும்”**

**– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்**
**புரட்சித்தலைவி அம்மா அவர்கள்**

## புகைப்படப் பிரிவு

புகைப்படப் பிரிவில் புதிய வகை டிஜிட்டல் புகைப்படக் கருவிகள் மூலம் வண்ணப் புகைப்படங்கள் எடுக்கப்பட்டு, அவை தலைமைச் செயலகத்திலிருந்து மின்னஞ்சல் மூலம் உடனுக்குடன் ஏறக்குறைய 200 ஊடகங்களுக்கு, ஒரே நேரத்தில் அனுப்பி வைக்கப்படுகின்றன. அத்துடன் முக்கிய விழாக்கள் நடைபெறும் இடத்திலிருந்தே இணைய வசதியுடன் கூடிய மடிக்கணினிகள் மூலம் புகைப்படங்கள் உடனுக்குடன் ஊடகங்களுக்கு அனுப்பப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பங்கேற்கும் நிகழ்ச்சிகளின் புகைப்படங்கள் அடிக்குறிப்புகளுடன் உடனுக்குடன் பொதுமக்கள் அறியும் வகையில் டிஜிட்டல் தொலைக்காட்சி மூலம் தலைமைச்செயலக முதன்மைக் கட்டடத்தில் சீர் பெருமக்களுக்கான மின்தூக்கி அருகில் ஒன்றும், நாமக்கல் கவிஞர் மாளிகையில் சீர் பெருமக்கள் செல்லும் மின்தூக்கி அருகில் மற்றொன்றும் பொருத்தப்பட்டுள்ளன.

புதுடெல்லி செய்தி நிலையத்திற்கு ஒரு அதி நவீன புகைப்படக்கருவி ரூ.4.80 லட்சம் மதிப்பீட்டில் பகுதி II திட்டத்தில் வாங்கப்பட்டுப் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

**“வாழ்க்கையில் முன்னேறுவதற்கு படிப்பு மட்டும் இருந்தால் போதாது. கடுமையான உழைப்பும் தன்னம்பிக்கையும் தேவை”**

**– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்**
**புரட்சித்தலைவி அம்மா அவர்கள்**

## மேற்கோள் பிரிவு

நாளிதழ்கள், பருவ இதழ்கள், வெளிமாநில நாளிதழ்கள் போன்றவற்றில் வெளிவரும் முக்கிய செய்திகளை நாள்தோறும் அரசின் கவனத்திற்கு எடுத்துச் செல்லும் முக்கிய பணியினை தலைமையிடத்தில் உள்ள மேற்கோள்பிரிவு சிறப்புடன் மேற்கொண்டு வருகிறது.

இப்பிரிவில் நாள்தோறும் வெளிவரும் காலை, மாலை நாளிதழ்கள், காலமுறை இதழ்கள் மற்றும் வெளிமாநில நாளிதழ்களில் வெளியாகும் முக்கியச் செய்திகள், செய்தி நறுக்குகளாகத் தொகுக்கப்பட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பார்வைக்கு அனுப்பும் பணி மேற்கொள்ளப்படுகிறது.

மேலும், நாளிதழ்கள், பருவ இதழ்களில் வெளிவரும் முக்கியச் செய்திகள் மாண்புமிகு அமைச்சர்கள், தலைமைச் செயலாளர் மற்றும் துறைச் செயலாளர்களின் பார்வைக்கும், நடவடிக்கைக்கும் தொகுத்து அனுப்பும்

பணியும் மேற்கொள்ளப்படுகிறது. அதே போன்று நாளிதழ்களில் பிற துறைகள் தொடர்பாக வெளிவரும் முக்கியச் செய்திகள் ஸ்கேன் (Scan) செய்யப்பட்டு, உரிய துறைச் செயலாளர்களுக்கு மின்னஞ்சல் (e-mail) மூலம் நாள்தோறும் காலையில் அனுப்பப்பட்டு வருகின்றன. இச்செய்திகள் அத்துறையின் செயலாளர்கள் அறியும் பொருட்டு குறுஞ்செய்திகளும் (SMS) அனுப்பப்படுகின்றன. அத்துறையின் துறைத் தலைவர்களுக்கும் குறுஞ்செய்திகள் மற்றும் மின்னஞ்சல்கள் அனுப்பும் சிறப்பு பணியையும் இப்பிரிவு நாள்தோறும் மேற்கொள்கிறது. முக்கியமான தமிழ், ஆங்கில நாளிதழ்கள் முறையாகத் தொகுக்கப்பட்டு, எதிர்காலத் தேவைக்கென இப்பிரிவில் பாதுகாக்கப்பட்டு வருகின்றது. மேலும், இவை தேவைப்படும்போது, மாண்புமிகு முதலமைச்சர், அமைச்சர் பெருமக்கள், துறைச்செயலாளர்கள் மற்றும் துறை அலுவலர்களின் தேவைக்கும் வழங்கப்படுகின்றன.

காலச்சுவடுகளின் தொகுப்பாக விளங்கும் பழைய நாளிதழ்களை நவீன மின்னணு முறையில் எண்மயப்படுத்திப் (Digitization) பராமரிக்க வேண்டும் என்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, மேற்கோள் பிரிவில் பராமரிக்கப்படும் நாளிதழ்களில் இடம்பெற்ற முக்கியச் செய்திகள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்புகள், உரைகள், பேட்டிகள், அரசின் சாதனைகள், வழங்கப்படும் நலத்திட்ட உதவிகள், அரசு ஆணைகள்,

போன்றவை அடங்கிய தகவல்களும், நாளிதழ்களின் தலையங்கங்கள், கட்டுரைகள், விமர்சனங்கள், பல்வேறு தலைவர்களின் கருத்துகள் போன்றவையும், தனித்தனித் தலைப்புகளில் தொகுக்கப்பட்டு மின்னணு முறையில் எண்மயப்படுத்தப்பட்டு பாதுகாக்கப்படுகின்றன.

ரூ.75 லட்சம் மதிப்பீட்டில் பழைய நாளிதழ்கள் நவீன முறையில் எண்மயப்படுத்தப்பட்டு பாதுகாக்கப்படுகின்றன.

தலைமையிடத்தில் உள்ள மேற்கோள் பிரிவில் உள்ள பழைய நாளிதழ்கள் மற்றும் பருவ நாளிதழ்களைப் பாதுகாக்கும் பொருட்டு இப்பிரிவு ரூ.40 லட்சம் மதிப்பீட்டில் நவீனப்படுத்தப்பட்டுள்ளது.

ஒவ்வோர் ஆண்டும் நாளிதழ்கள், பருவ இதழ்கள் வெளி மாநில நாளிதழ்களின் முக்கிய செய்திகள் தொகுக்கப்பட்டு சிறப்பு சாதனை மலர் வெளியிடப்பட்டு வருகிறது.

| | | |
|---|---|---|
| **2012** | – | பத்திரிகையின் பார்வையில்<br>ஒளிரும் சாதனைகள் |
| **2013** | – | சாதனை புரிந்த ஈராண்டு!<br>சரித்திரம் பேசும் பல்லாண்டு! |
| **2014** | – | மூன்றாண்டு ஆட்சி<br>முழுமையான வளர்ச்சி |
| **2015** | – | ஊடகங்களில் பாராட்டு |

**“நாட்டின் சுதந்திரத்திற்காகப் போராடிய தியாகிகளையும்; சமுதாய மேம்பாட்டிற்காகப் பாடுபட்ட தலைவர்களையும் போற்றிப் பெருமைப்படுத்த வேண்டியது ஒரு நல்லரசின் கடமையாகும்”**

**– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்**
**புரட்சித்தலைவி அம்மா அவர்கள்**

## நினைவகங்கள்

இந்தியத் திருநாடு விடுதலை பெற்றிட தன்னுயிரைத் துச்சமென மதித்துத் தியாகங்கள் பல புரிந்த தியாகச் செம்மல்கள், தமிழ்மொழியின் வளர்ச்சிக்காகவும், உரிமைக்காகவும் தம்முடைய வாழ்க்கையையே அர்ப்பணித்த தமிழ்ச் சான்றோர்கள் ஆகியோரது நினைவைப் போற்றி அவர்களை பெருமைப்படுத்தும் வகையில் செய்தி மக்கள் தொடர்புத் துறையால் **61** நினைவகங்கள், **3** அரங்கங்கள், **5** நினைவுத் தூண்கள் மற்றும் **1** நினைவுச்சின்னம் ஆகியன உருவாக்கப்பட்டு, சிறந்த முறையில் பேணிப் பாதுகாக்கப்பட்டு வருகிறது. மேலும் புதியதாக **5** மணிமண்டபங்கள் மற்றும் **1** கலையரங்கம் கட்டும் பணிகள் விரைந்து நடைபெற்று வருகின்றன. இதுமட்டுமல்லாமல் **1** மணிமண்டபத்தின் கட்டுமானப் பணிகள் தொடங்கும் நிலையில் உள்ளது.

## நினைவகங்கள்

| வ. எண் | நினைவகம் | அமைவிடம் |
|---|---|---|
| 1 | பேரறிஞர் அண்ணா நினைவிடம் மற்றும் அருங்காட்சியகம் | மெரினா கடற்கரை, காமராஜர் சாலை, சென்னை |
| 2 | பாரத ரத்னா டாக்டர் எம்ஜிஆர் நினைவிடம் மற்றும் அருங்காட்சியகம் | மெரினா கடற்கரை, காமராஜர் சாலை, சென்னை |
| 3 | பெருந்தலைவர் காமராஜர் நினைவகம் | சர்தார் வல்லபபாய் பட்டேல் சாலை, கிண்டி, சென்னை |
| 4 | பெரியவர் எம்.பக்தவத்சலம் நினைவிடம் | சர்தார் வல்லபபாய் பட்டேல் சாலை, கிண்டி, சென்னை |
| 5 | காந்தி மண்டபம் | சர்தார் வல்லபபாய் பட்டேல் சாலை, கிண்டி, சென்னை |
| 6 | மூதறிஞர் இராஜாஜி நினைவாலயம் | சர்தார் வல்லபபாய் பட்டேல் சாலை, கிண்டி, சென்னை |
| 7 | மகாகவி பாரதியார் நினைவு இல்லம் | துளசிங்கப் பெருமாள் கோவில் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை |
| 8 | பெருந்தலைவர் காமராஜர் நினைவு இல்லம் | திருமலை சாலை, தியாகராயநகர், சென்னை |
| 9 | வள்ளுவர் கோட்டம் | நுங்கம்பாக்கம், சென்னை |
| 10 | மொழிப்போர்த் தியாகிகள் மணிமண்டபம் | சர்தார் வல்லபபாய் பட்டேல் சாலை, கிண்டி, சென்னை |
| 11 | தியாகிகள் மணிமண்டபம் | சர்தார் வல்லபபாய் பட்டேல் சாலை, கிண்டி, சென்னை |

| வ. எண் | நினைவகம் | அமைவிடம் |
|---|---|---|
| 12 | இரட்டைமலை சீனிவாசன் நினைவகம் | சர்தார் வல்லபபாய் பட்டேல் சாலை, கிண்டி, சென்னை |
| 13 | கண்ணியத்தென்றல் காயிதே மில்லத் முகம்மது இஸ்மாயில் மணிமண்டபம் | டாம்ஸ் சாலை, சென்னை |
| 14 | பேரறிஞர் அண்ணா நினைவு இல்லம் | சின்னக் காஞ்சிபுரம், காஞ்சிபுரம் மாவட்டம் |
| 15 | திருப்பூர் குமரன் நினைவகம் | திருப்பூர், திருப்பூர் மாவட்டம் |
| 16 | பகுத்தறிவுக் கவிராயர் உடுமலை நாராயணகவி மணிமண்டபம் | உடுமலைப்பேட்டை, திருப்பூர் மாவட்டம் |
| 17 | தந்தை பெரியார் நினைவகம் | வைக்கம், கோட்டயம் மாவட்டம், கேரள மாநிலம் |
| 18 | பெரியார்–அண்ணா நினைவகம் | ஈரோடு, ஈரோடு மாவட்டம் |
| 19 | தீரன் சின்னமலை மணிமண்டபம் | ஓடாநிலை, அரச்சலூர், ஈரோடு மாவட்டம் |
| 20 | மூதறிஞர் இராஜாஜி பிறந்த இல்லம் | தொரப்பள்ளி, கிருஷ்ணகிரி மாவட்டம் |
| 21 | வள்ளல் அதியமான் கோட்டம் | தருமபுரி, தருமபுரி மாவட்டம் |
| 22 | நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை நினைவு இல்லம் | நாமக்கல், நாமக்கல் மாவட்டம் |

| வ. எண் | நினைவகம் | அமைவிடம் |
|---|---|---|
| 23 | வ.வே.சுப்பிரமணிய அய்யர் நினைவு இல்லம் | வரகனேரி, திருச்சிராப்பள்ளி மாவட்டம் |
| 24 | பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் மணிமண்டபம் | பட்டுக்கோட்டை, தஞ்சாவூர் மாவட்டம் |
| 25 | தில்லையாடி வள்ளியம்மை நினைவகம் | தில்லையாடி, நாகப்பட்டினம் மாவட்டம் |
| 26 | தமிழ்த் தாத்தா டாக்டர் உ.வே.சா. நினைவு இல்லம் | உத்தமதானபுரம், திருவாரூர் மாவட்டம் |
| 27 | தியாகி பி.சீனிவாசராவ் நினைவு மண்டபம் | திருத்துறைப்பூண்டி, திருவாரூர் மாவட்டம் |
| 28 | கவியரசு கண்ணதாசன் மணிமண்டபம் | காரைக்குடி, சிவகங்கை மாவட்டம் |
| 29 | தவத்திரு குன்றக்குடி அடிகளார் மணிமண்டபம் | குன்றக்குடி, சிவகங்கை மாவட்டம் |
| 30 | மருதுபாண்டியர் நினைவு மண்டபம் | திருப்பத்தூர், சிவகங்கை மாவட்டம் |
| 31 | தியாக சீலர் கக்கன் மணிமண்டபம் | தும்பைப்பட்டி, மதுரை மாவட்டம் |
| 32 | தியாகி விஸ்வநாததாஸ் நினைவு இல்லம் | திருமங்கலம், மதுரை மாவட்டம் |
| 33 | பரிதிமாற் கலைஞர் நினைவு இல்லம் | விளாச்சேரி, மதுரை மாவட்டம் |

| வ. எண் | நினைவகம் | அமைவிடம் |
| --- | --- | --- |
| 34 | மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் மணிமண்டபம் | சாத்தமங்கலம், மதுரை மாவட்டம் |
| 35 | பெருந்தலைவர் காமராஜர் பிறந்த இல்லம் | விருதுநகர், விருதுநகர் மாவட்டம் |
| 36 | பெருந்தலைவர் காமராஜர் நூற்றாண்டு விழா மணிமண்டபம் | விருதுநகர், விருதுநகர் மாவட்டம் |
| 37 | மகாகவி பாரதியார் மணிமண்டபம் | எட்டயபுரம், தூத்துக்குடி மாவட்டம் |
| 38 | மகாகவி பாரதியார் இல்லம் | எட்டயபுரம், தூத்துக்குடி மாவட்டம் |
| 39 | கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் இல்லம் | ஒட்டப்பிடாரம், தூத்துக்குடி மாவட்டம் |
| 40 | வீரன் அழகுமுத்துக்கோன் மணிமண்டபம் | கட்டாலங்குளம், தூத்துக்குடி மாவட்டம் |
| 41 | சுதந்திரப்போராட்ட வீரன் சுந்தரலிங்கம் நினைவகம் | கவர்ணகிரி, தூத்துக்குடி மாவட்டம் |
| 42 | சுதந்திரப்போராட்ட வீரன் வெள்ளையத்தேவன் நினைவகம் | வல்லநாடு, தூத்துக்குடி மாவட்டம் |
| 43 | அமுதகவி உமறுப்புலவர் நினைவகம் | எட்டயபுரம், தூத்துக்குடி மாவட்டம் |
| 44 | கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி. மணிமண்டபம் | திருநெல்வேலி, திருநெல்வேலி மாவட்டம் |

| வ. எண் | நினைவகம் | அமைவிடம் |
|---|---|---|
| 45 | பூலித்தேவன் நினைவு மாளிகை | நெற்கட்டும்செவல், திருநெல்வேலி மாவட்டம் |
| 46 | தமிழறிஞர் கால்டுவெல் நினைவு இல்லம் | இடையன்குடி, திருநெல்வேலி மாவட்டம் |
| 47 | பொதுவுடைமை வீரர் ப.ஜீவானந்தம் மணிமண்டபம் | நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம் |
| 48 | காந்தி நினைவு மண்டபம் | கன்னியாகுமரி, கன்னியாகுமரி மாவட்டம் |
| 49 | பெருந்தலைவர் காமராஜர் மணிமண்டபம் | கன்னியாகுமரி, கன்னியாகுமரி மாவட்டம் |
| 50 | சதாவதானி செய்குத்தம்பிபாவலர் நினைவு மண்டபம் | இடலாக்குடி, கோட்டாறு, கன்னியாகுமரி மாவட்டம் |
| 51 | முத்து மண்டபம் (இலங்கையின் கடைசித் தமிழ் மன்னர் விக்ரம ராஜ சிங்கன் நினைவகம்) | வேலூர், வேலூர் மாவட்டம் |
| 52 | தியாகி சுப்பிரமணிய சிவா மணிமண்டபம் | பாப்பாரப்பட்டி, தருமபுரி மாவட்டம் |
| 53 | தமிழிசை மூவர் மணிமண்டபம் | சீர்காழி, நாகப்பட்டினம் மாவட்டம் |
| 54 | விடுதலைப் போராட்ட வீரர் கோபால் நாயக்கர் மணிமண்டபம் | விருப்பாட்சி, திண்டுக்கல் மாவட்டம் |

| வ. எண் | நினைவகம் | அமைவிடம் |
|---|---|---|
| 55 | ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் மணிமண்டபம் | ஓமந்தூர், விழுப்புரம் மாவட்டம் |
| 56 | விடுதலைப் போராட்ட வீரர்தியாகிதீரன்சின்னமலை நினைவுச் சின்னம் | சங்ககிரி, சேலம் மாவட்டம் |
| 57 | தியாகி வாஞ்சிநாதன் மணிமண்டபம் | செங்கோட்டை, திருநெல்வேலி மாவட்டம் |
| 58 | மார்ஷல் நேசமணி மணிமண்டபம் | நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம் |
| 59 | வீரமங்கை வேலுநாச்சியார் நினைவு மண்டபம் | சூரக்குளம், சிவகங்கை மாவட்டம் |
| 60 | தியாகி சங்கரலிங்கனார் மணிமண்டபம் | விருதுநகர், விருதுநகர் மாவட்டம் |
| 61 | வீரபாண்டிய கட்டபொம்மன் மணிமண்டபம் | கயத்தாறு, தூத்துக்குடி மாவட்டம் |

**அரங்கங்கள்**

| வ. எண் | அரங்கம் | அமைவிடம் |
|---|---|---|
| 1 | இராஜாஜி மண்டபம் | ஓமந்தூரார் அரசினர் தோட்டம், சென்னை மாவட்டம் |
| 2 | அண்ணா கலை அரங்கம் | வேலூர், வேலூர் மாவட்டம் |
| 3 | மகாமகம் பல்நோக்கு கலை அரங்கம் | கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம் |

## நினைவுத்தூண்கள்

| வ. எண் | நினைவுத்தூண் | அமைவிடம் |
|---|---|---|
| 1 | "வெள்ளையனே வெளியேறு" இயக்கப் பொன்விழா நினைவுத் தூண் | காந்தி மண்டப வளாகம், சர்தார் வல்லபபாய் பட்டேல் சாலை, கிண்டி, சென்னை |
| 2 | சுதந்திரப் பொன்விழா நினைவுத் தூண் | போர் நினைவுச் சின்னம் அருகில், காமராஜர் சாலை, சென்னை |
| 3 | குடியரசுப் பொன்விழா நினைவுத் தூண் | காந்தி சிலை அருகில், காமராஜர் சாலை, சென்னை |
| 4 | சிப்பாய்ப் புரட்சி நினைவுத் தூண் | வேலூர், வேலூர் மாவட்டம் |
| 5 | பெருந்தலைவர் காமராஜர் நூற்றாண்டு விழா நினைவுத்தூண் | விருதுநகர், விருதுநகர் மாவட்டம் |

## நினைவுச்சின்னம்

| வ. எண் | நினைவுச்சின்னம் | அமைவிடம் |
|---|---|---|
| 1 | வீரத்தாய் குயிலி நினைவுச்சின்னம் | சூரக்குளம், சிவகங்கை மாவட்டம் |

## பணி முன்னேற்றத்தில் உள்ள மணிமண்டபங்கள் / கலையரங்கம்

| வ. எண் | மணிமண்டபம் / கலையரங்கம் | மதிப்பீடு | தற்போதைய நிலை |
|---|---|---|---|
| 1 | விடுதலைப் போராட்ட வீரர் ஒண்டிவீரன் மணிமண்டபம், பாளையங்கோட்டை, திருநெல்வேலி மாவட்டம் | ரூ.49.00 லட்சம் | மணிமண்டபம் அமைக்கும் பணி நிறைவு பெற்றுள்ளது. புதியதாக சிலை அமைக்கும் பணி நடைபெறவுள்ளது. |
| 2 | சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் மற்றும் சுயமரியாதைச் சுடரொளி ஜீவரத்தினம் ஆகியோருக்கு மணிமண்டபங்கள், நூலகம், சென்னை மாவட்டம் | ரூ.2.34 கோடி | பணி முடியும் தருவாயில் உள்ளது. |
| 3 | சென்னை ஓமந்தூரார் தோட்டத்தில் புதிய கலையரங்கம் மற்றும் மாநில செய்தி நிலையம் | ரூ.63.00 கோடி | கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. பணி முடிக்க உத்தேசிக்கப்பட்ட நாள்.15.10.2015. |
| 4 | பட்டுக்கோட்டை அழகிரிசாமி நினைவகம், பட்டுக்கோட்டை, தஞ்சாவூர் மாவட்டம் | ரூ.85.00 லட்சம் | அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. |

| வ. எண் | மணிமண்டபம் / கலையரங்கம் | மதிப்பீடு | தற்போதைய நிலை |
|---|---|---|---|
| 5 | சுவாமி சகஜானந்தா மணிமண்டபம், சிதம்பரம், கடலூர் மாவட்டம் | ரூ.1.15 கோடி | மாற்று இடம் தேர்வு செய்து அரசாணைக்கு திருத்தம் 13.08.2015 அன்று வெளியிடப்பட்டுள்ளது. கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. |
| 6 | மனுநீதிச் சோழன் நினைவு மண்டபம், திருவாரூர், திருவாரூர் மாவட்டம் | ரூ.1.10 கோடி | அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. |

## கட்டுமானப் பணிகள் தொடங்கப்படும் நிலையில் உள்ள மணிமண்டபம்

| வ. எண் | மணிமண்டபம் | மதிப்பீடு | தற்போதைய நிலை |
|---|---|---|---|
| 1 | ஹைதர் அலி மற்றும் திப்பு சுல்தான் மணிமண்டபம், திண்டுக்கல் மாவட்டம் | ரூ.1.30 கோடி | மாற்று இடம் தேர்வு செய்து அரசாணைக்கு திருத்தம் 13.08.2015 அன்று வெளியிடப்பட்டுள்ளது. பொதுப்பணித்துறையால் பணிகள் தொடங்கப்படவுள்ளன. |

## முன்னேற்றத்தில் உள்ள இதர பணிகள்

| வ. எண் | பூங்கா / புனரமைப்பு | மதிப்பீடு | தற்போதைய நிலை |
|---|---|---|---|
| 1 | பேரறிஞர் அண்ணா நினைவிட வளாகத்திற்குள் உள்ள 3 ஏக்கர் பரப்பளவிலான இடத்தினை மேம்படுத்தி, இயற்கை எழில் கொஞ்சும் பூங்கா அமைத்தல் | ரூ.7.50 கோடி | சென்னை மாநகராட்சி மூலம் பணிகள் நடைபெற்று வருகின்றன. |
| 2 | சென்னை திருவல்லிக்கேணியில் உள்ள மகாகவி பாரதியார் நினைவு இல்லத்தை புனரமைத்தல் | ரூ.25.00 லட்சம் | பொதுப்பணித்துறை மூலம் பணிகள் நடைபெற்று வருகின்றன. |
| 3 | காந்தி மண்டப வளாகத்தில் புனரமைக்கப்பட்ட பூங்கா மற்றும் புல்வெளிகளை பராமரித்தல் | ரூ.66.00 லட்சம் | பொதுப்பணித் துறை மூலம் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. |

## புனரமைக்கப்பட்ட பணிகள்

- பேரறிஞர் அண்ணா மற்றும் டாக்டர் எம்ஜிஆர் நினைவிடங்களில் ரூ.19.50 லட்சம் மதிப்பீட்டில் சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியம் மூலம் குடிநீர் வசதி செய்யப்பட்டுள்ளது.

- சென்னை, திருமலை சாலையில் உள்ள பெருந்தலைவர் காமராஜர் நினைவு இல்லம் ரூ.25.00 லட்சம் மதிப்பீட்டில் புனரமைக்கப்பட்டுள்ளது.

- சென்னை, ஓமந்தூரார் தோட்டத்தில் அமைந்துள்ள இராஜாஜி மண்டபம் ரூ.75.00 லட்சம் செலவில் புனரமைக்கப்பட்டுள்ளது.

- பேரறிஞர் அண்ணா மற்றும் புரட்சித் தலைவர் எம்ஜிஆர் நினைவிடங்களில் நாளுக்கு நாள் பார்வையாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதைக் கருத்தில் கொண்டு, தமிழ்நாடு காவல் துறை மூலம் பாதுகாப்புப் பணி மேற்கொள்ள அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

- காஞ்சிபுரத்தில் உள்ள பேரறிஞர் அண்ணா நினைவு இல்லம் ரூ.10.00 லட்சம் மதிப்பீட்டில் புனரமைக்கப்பட்டுள்ளது.

- நாகப்பட்டினம் தில்லையாடி வள்ளியம்மை நினைவகம் ரூ.5.00 லட்சம் மதிப்பீட்டில் புனரமைக்கப்பட்டுள்ளது.

- பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் மணிமண்டபத்தில் ரூ.1.40 லட்சம் மதிப்பீட்டில் ஒலிபரப்புக் கருவிகள் பொருத்தப்பட்டு அன்னாரின் பாடல்கள் ஒலிபரப்பப்பட்டு வருகின்றன.

## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களால் திறந்து வைக்கப்பட்ட மணிமண்டபங்கள்

- மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களால், ரூ.40 லட்சம் மதிப்பீட்டில் தருமபுரி மாவட்டம், பாப்பாரப்பட்டியில் கட்டப்பட்ட தியாகி சுப்பிரமணிய சிவா மணிமண்டபம் 18.07.2011 அன்று திறந்து வைக்கப்பட்டது.
- மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களால், ரூ.1.51 கோடி மதிப்பீட்டில் சீர்காழியில் அமைக்கப்பட்டுள்ள தமிழிசை மூவர் மணிமண்டபம், 20.02.2013 அன்று திறந்து வைக்கப்பட்டது.
- மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களால், ரூ.69 லட்சம் மதிப்பீட்டில் விருப்பாச்சியில் கட்டப்பட்டுள்ள விடுதலை போராட்ட வீரர் கோபால் நாயக்கர் மணிமண்டபம் 20.02.2013 அன்று திறந்து வைக்கப்பட்டது.
- மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களால், ரூ.60 லட்சம் மதிப்பீட்டில் சேலம் மாவட்டம் சங்ககிரியில் அமைக்கப்பட்ட விடுதலைப் போராட்ட வீரர் தியாகி தீரன் சின்னமலை நினைவுச் சின்னம், 20.02.2013 அன்று திறந்து வைக்கப்பட்டது.
- மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களால், ரூ.69 லட்சம் மதிப்பீட்டில் ஓமந்தூரில் கட்டப்பட்டுள்ள முன்னாள் முதலமைச்சர் ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் மணிமண்டபம் 20.02.2013 அன்று திறந்து வைக்கப்பட்டது
- மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களால், ரூ.50 லட்சம் மதிப்பீட்டில் திருநெல்வேலி மாவட்டம் செங்கோட்டையில் கட்டப்பட்ட தியாகி வாஞ்சிநாதன் மணிமண்டபம், 23.12.2013 அன்று திறந்து வைக்கப்பட்டது.
- மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களால், ரூ.48.70 லட்சம் மதிப்பீட்டில் கன்னியாகுமரி

மாவட்டம், நாகர்கோவிலில் கட்டப்பட்ட மார்சல் நேசமணி மணிமண்டபம், 27.02.2014 அன்று திறந்து வைக்கப்பட்டது.

- மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களால், ரூ.60 லட்சம் மதிப்பீட்டில் சிவகங்கை மாவட்டம், வீரமங்கை வேலுநாச்சியார் அவர்களுக்கு நினைவு மண்டபம் அமைக்கப்பட்டு 18.07.2014 அன்று திறந்து வைக்கப்பட்டது.
- மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களால், ரூ.27.50 லட்சம் மதிப்பீட்டில் சிவகங்கை மாவட்டத்தில் வீரமங்கை வேலுநாச்சியார் அவர்களுக்கு நினைவு மண்டபம் அமைக்கப்பட்ட வளாகத்தில் வீரத்தாய் குயிலிக்கு நினைவுச்சின்னம் அமைக்கப்பட்டு 18.07.2014 அன்று திறந்து வைக்கப்பட்டது.
- மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களால், நமது மாநிலத்திற்கு சென்னை மாகாணம் என இருந்த பெயரை மாற்றித் தமிழ்நாடு என பெயரிட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து உண்ணாவிரதம் மேற்கொண்டு உயிர் துறந்த தியாகி சங்கரலிங்கனார் அவர்களின் தியாகத்தைப் போற்றும் வகையில் விருதுநகர் மாவட்டம், விருதுநகரில் ரூ.77 லட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள தியாகி சங்கரலிங்கனார் மணிமண்டபம் 18.6.2015 அன்று திறந்து வைக்கப்பட்டது.
- மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களால், ஆங்கிலேயர்களின் ஏகாதிபத்தியத்தை எதிர்த்தவரும், தேசபக்தி மிகுந்தவரும், நமது நாட்டின் முன்னோடி சுதந்திரப் போராட்ட வீரருமான வீரபாண்டிய கட்டபொம்மன் அவர்களின் நினைவைப் போற்றும் வகையில் தூத்துக்குடி மாவட்டம், கயத்தாறில் ரூ.1 கோடியே 20 லட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்ட வீரபாண்டிய கட்டபொம்மன் மணிமண்டபம் 18.6.2015 அன்று திறந்து வைக்கப்பட்டது.

## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களால் புனரமைத்து திறந்து வைக்கப்பட்ட மணிமண்டபங்கள் மற்றும் கலையரங்கம்

- மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களால், ரூ.8.90 கோடி மதிப்பீட்டில் சென்னையில் உள்ள பேரறிஞர் அண்ணா நினைவிடத்தை மேம்படுத்தவும், பாரத ரத்னா டாக்டர் எம்ஜிஆர் நினைவிடத்தை புனரமைக்கவும் ஆணையிடப்பட்டவாறு பணிகள் முடிவுற்று புதுப்பொலிவுடன் புனரமைக்கப்பட்ட பாரத ரத்னா டாக்டர் எம்ஜிஆர் நினைவிடம் 09.12.2012 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

- மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களால், ரூ.63 லட்சம் மதிப்பீட்டில் புனரமைத்து நவீனமயம் ஆக்கப்பட்ட கும்பகோணம் மகாமகம் பல்நோக்கு கலையரங்கம், 20.02.2013 அன்று திறந்து வைக்கப்பட்டது.

- மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களால், ரூ.12 கோடி மதிப்பீட்டில் புனரமைக்கப்பட்ட சென்னை கிண்டியிலுள்ள காந்தி மண்டப வளாகம் 27.06.2014 அன்று திறந்து வைக்கப்பட்டது.

- மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களால், ரூ.25 லட்சம் மதிப்பீட்டில் புதுப்பிக்கப்பட்ட கேரள மாநிலம் வைக்கத்தில் உள்ள தந்தை பெரியார் நினைவகம் 27.06.2014 அன்று திறந்து வைக்கப்பட்டது.

**“இந்த அரசு, நாட்டின் வளர்ச்சியை, மக்களின் வளர்ச்சியை, குறிப்பாக, ஏழை, எளிய மக்களின் வளர்ச்சியை, அவர்களின் பாதுகாப்பினை குறிக்கோளாகக் கொண்டு செயல்படுகிற அரசு”**

**– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்**
**புரட்சித்தலைவி அம்மா அவர்கள்**

## அரசு விழாக்கள்

தமிழ் மொழியின் வளர்ச்சிக்குப் பாடுபட்ட சான்றோர்களையும், தமிழகத்தின் முன்னேற்றத்திற்காகப் பாடுபட்ட பெரியோர்களையும், இந்தியத் திருநாட்டின் விடுதலைக்குப் பாடுபட்ட தலைவர்களையும் நினைவு கூர்ந்து பெருமைப்படுத்தும் வகையிலும், அவர்கள் ஆற்றிய தியாகத் தொண்டுகளை இளைய தலைமுறையினர் அறிந்து கொள்ளவும், அவர்களது பிறந்த நாள் விழாக்களையும், நினைவு நாள் நிகழ்ச்சிகளையும் அரசு நடத்துகிறது. இத்தகைய விழாக்களில் மேதகு ஆளுநர் அவர்கள், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் ஆகியோர் பங்கேற்க, அன்னாரது திருவுருவச் சிலைகளுக்கு அரசின் சார்பில் மாலைகள் அணிவித்தும், திருவுருவப் படங்களுக்கு மலர் தூவியும் மரியாதை செலுத்தப்படுகிறது.

## சென்னையில் நடத்தப்படும் விழாக்கள்

| வ. எண் | நாள் | விழாக்கள் |
|---|---|---|
| 1 | ஜனவரி 17 | பாரத ரத்னா டாக்டர் எம்ஜிஆர் பிறந்த நாள் விழா |
| 2 | ஜனவரி 23 | நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் பிறந்த நாள் விழா |
| 3 | ஜனவரி 30 | அண்ணல் காந்தியடிகள் நினைவு நாள் |
| 4 | பிப்ரவரி 18 | சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் பிறந்த நாள் விழா |
| 5 | ஏப்ரல் 14 | டாக்டர் அம்பேத்கர் பிறந்த நாள் விழா |
| 6 | ஏப்ரல் 17 | சுதந்திரப் போராட்ட வீரர் தீரன் சின்னமலை பிறந்த நாள் விழா |
| 7 | ஏப்ரல் 27 | சர்.பிட்டி.தியாகராயர் பிறந்த நாள் விழா |
| 8 | ஏப்ரல் 29 | பாவேந்தர் பாரதிதாசன் பிறந்த நாள் விழா |
| 9 | மே 3 | சித்திரை முழு நிலவு நாளன்று கண்ணகி சிலைக்கு மாலை அணிவித்தல் மற்றும் திருவுருவப்படத்திற்கு மலர் அலங்காரம் செய்து மலர்தூவி மரியாதை செய்தல் |
| 10 | ஜூன் 5 | கண்ணியத் தென்றல் காயிதே மில்லத் முகம்மது இஸ்மாயில் பிறந்த நாள் விழா |
| 11 | ஜூன் 24 | கவியரசு கண்ணதாசன் பிறந்த நாள் விழா |
| 12 | ஜூலை 7 | இரட்டைமலை சீனிவாசன் பிறந்த நாள் விழா |

| வ. எண் | நாள் | விழாக்கள் |
|---|---|---|
| 13 | ஜூலை 15 | பெருந்தலைவர் காமராஜர் பிறந்த நாள் விழா |
| 14 | ஜூலை 17 | தியாகிகள் தினம், தியாகி ஆர்யா (எ) பாஷ்யம் |
| 15 | ஜூலை 17 | தியாகிகள் தினம், தியாகி சங்கரலிங்கனார் |
| 16 | ஜூலை 17 | தியாகிகள் தினம், தியாகி செண்பகராமன் |
| 17 | செப்டம்பர் 5 | கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் பிறந்த நாள் விழா |
| 18 | செப்டம்பர் 15 | பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் விழா |
| 19 | செப்டம்பர் 17 | தந்தை பெரியார் பிறந்த நாள் விழா |
| 20 | செப்டம்பர் 29 | முன்னாள் சென்னை மேயர் சிவராஜ் பிறந்த நாள் விழா |
| 21 | அக்டோபர் 2 | அண்ணல் காந்தியடிகள் பிறந்த நாள் விழா |
| 22 | அக்டோபர் 30 | பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் பிறந்த நாள் விழா |
| 23 | நவம்பர் 8 | தமிழறிஞர் வீரமாமுனிவர் பிறந்த நாள் விழா |
| 24 | நவம்பர் 14 | பண்டித ஜவஹர்லால் நேரு பிறந்த நாள் விழா |
| 25 | நவம்பர் 23 | கவிஞர் சுரதா பிறந்த நாள் விழா |
| 26 | டிசம்பர் 10 | மூதறிஞர் இராஜாஜி பிறந்த நாள் விழா |
| 27 | டிசம்பர் 11 | மகாகவி பாரதியார் பிறந்த நாள் விழா |

# மாவட்டங்களில் நடத்தப்படும் விழாக்கள்

| வ. எண் | நாள் | விழாக்கள் | நிகழ்விடம் |
|---|---|---|---|
| 1 | ஜனவரி 3 | வீரமங்கை வேலுநாச்சியார் பிறந்த நாள் விழா | சூரக்குளம், சிவகங்கை மாவட்டம் |
| 2 | மார்ச் 30 | ரிபெல் முத்துராமலிங்க சேதுபதி பிறந்த நாள் விழா | இராமநாதபுரம், இராமநாதபுரம் மாவட்டம் |
| 3 | ஏப்ரல் 16 | வீரன் சுந்தரலிங்கனார் பிறந்த நாள் விழா | கவர்ணகிரி, தூத்துக்குடி மாவட்டம் |
| 4 | மே 8 | வீரபாண்டிய கட்டபொம்மன் பிறந்த நாள் விழா | பாஞ்சாலங்குறிச்சி, தூத்துக்குடி மாவட்டம் |
| 5 | மே 23 | பெரும்பிடுகு முத்தரையர் பிறந்த நாள் விழா | திருச்சிராப்பள்ளி, திருச்சிராப்பள்ளி மாவட்டம் |
| 6 | ஜூன் 16 | தியாகி விஸ்வநாததாஸ் பிறந்த நாள் விழா | திருமங்கலம், மதுரை மாவட்டம் |
| 7 | ஜூன் 18 | தியாக சீலர் கக்கன் பிறந்த நாள் விழா | மேலூர் அருகில் தும்பைப்பட்டி, மதுரை மாவட்டம் |
| 8 | ஜூலை 6 | தமிழறிஞர் பரிதிமாற் கலைஞர் பிறந்த நாள்விழா | விளாச்சேரி, மதுரை மாவட்டம் |
| 9 | ஜூலை 11 | வீரன் அழகுமுத்துக்கோன் பிறந்த நாள் விழா | கோவில்பட்டி, தூத்துக்குடி மாவட்டம் |

| வ. எண் | நாள் | விழாக்கள் | நிகழ்விடம் |
|---|---|---|---|
| 10 | ஜூலை31 | சதாவதானி செய்குத்தம்பி பாவலர் பிறந்த நாள் விழா | இடலாக்குடி, நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம் |
| 11 | ஆகஸ்ட் 2 மற்றும் 3 | வல்வில் ஓரி விழா | கொல்லிமலை, நாமக்கல் மாவட்டம் |
| 12 | ஆகஸ்ட் 3 (ஆடி 18) | தீரன் சின்னமலை நினைவு நாள் | ஓடாநிலை, அரச்சலூர், ஈரோடு மாவட்டம் |
| 13 | செப்டம்பர் 5 | கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் பிறந்த நாள் விழா | ஒட்டப்பிடாரம், தூத்துக்குடி மாவட்டம் |
| 14 | செப்டம்பர் 15 | பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் விழா | ஈரோடு, ஈரோடு மாவட்டம் |
| 15 | செப்டம்பர் 17 | தந்தை பெரியார் பிறந்த நாள் விழா | ஈரோடு, ஈரோடு மாவட்டம் |
| 16 | அக்டோபர் 2 | அண்ணல் காந்தியடிகள் பிறந்த நாள் விழா | அனைத்து மாவட்டங்கள் |
| 17 | அக்டோபர் 4 | தியாகி சுப்பிரமணிய சிவா பிறந்த நாள் விழா | பாப்பாரப்பட்டி, தருமபுரி மாவட்டம் |
| 18 | அக்டோபர் 24 | மருதுபாண்டியர் நினைவு நாள் | திருப்பத்தூர், சிவகங்கை மாவட்டம் |
| 19 | அக்டோபர் 30 | பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் பிறந்த நாள் விழா | பசும்பொன், இராமநாதபுரம் மாவட்டம் |

| வ. எண் | நாள் | விழாக்கள் | நிகழ்விடம் |
|---|---|---|---|
| 20 | நவம்பர் 1 | கன்னியாகுமரி மாவட்டம் தாய்த் தமிழகத்துடன் இணைந்த நாளை முன்னிட்டு மார்ஷல் நேசமணி அவர்களின் திருவுருவச்சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தும் விழா | நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம் |
| 21 | டிசம்பர் 10 | மூதறிஞர் இராஜாஜி பிறந்த நாள் விழா | தொரப்பள்ளி, கிருஷ்ணகிரி மாவட்டம் |
| 22 | டிசம்பர் 11 | மகாகவி பாரதியார் பிறந்த நாள் விழா | எட்டயபுரம், தூத்துக்குடி மாவட்டம் |

**“ஒரு தேசத்தின் வளர்ச்சி என்பது ஏழைகளின் கண்ணீரைத் துடைப்பதாக இருக்க வேண்டும். அரசின் சட்டங்கள் மற்றும் திட்டங்கள் மக்கள் நலன் கருதியே அமைய வேண்டும்”**

**– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்**
**புரட்சித்தலைவி அம்மா அவர்கள்**

## கள விளம்பரம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி தமிழ்நாடு அரசின் அனைத்து துறைகள் வாயிலாக செயல்படுத்தப்படும் பல்வேறு நலத்திட்டங்கள் மூலம் மக்கள் அடைந்துள்ள பயன்களை ஆவணப்படுத்துவதையும், அந்த திட்டங்கள் குறித்து நேரடியாக மக்களிடம் எடுத்துச் சென்று விளம்பரப்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டு கள விளம்பரப்பிரிவு என்னும் புதிய பிரிவு முதன் முதலாக செய்தித்துறையில் உருவாக்கப்பட்டுள்ளது.

### தகவல் மற்றும் சாதனைகள் தொகுப்பு வங்கி (Information & Achievements Data Bank)

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, தகவல் மற்றும் சாதனைகள் தொகுப்பு வங்கி (Information & Achievements Data Bank) ஒன்று புதியதாக உருவாக்கப்பட்டுள்ளது. இதன் மூலம்

அரசின் திட்டங்கள் மற்றும் சாதனை விவரங்களை, துறைகள் வாரியாகவும், மாவட்டங்கள் வாரியாகவும், நாடாளுமன்ற, சட்டமன்ற தொகுதிகள் வாரியாகவும் தொகுப்பதற்காக புதிதாக மென்பொருள் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த மென்பொருள் வாயிலாக மாவட்டங்களிலுள்ள அனைத்துத் துறைகள் மூலம் வழங்கப்பட்ட அரசு நலத்திட்ட உதவிகள் மற்றும் பயனாளிகளின் விவரங்களை கணினி மூலம் பதிவேற்றம் செய்திட அனைத்துத் துறையினரும் இத்துறையில் ஒருங்கிணைக்கப்பட்டு, அரசிற்குத் தேவைப்படும் நேரங்களில் உடனடியாக விவரங்கள் வழங்கும் பணியை இப்பிரிவு செய்து வருகிறது.

## மின்னணு விளம்பரத் திரைகள் (LED TV)

அரசின் திட்டங்கள் மற்றும் சாதனை விவரங்களை, தமிழகமெங்கும் உள்ள அனைத்துப் பகுதி மக்களும் அறிந்து பயன்பெறும் வகையில், ஒவ்வொரு மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள், வட்டாட்சியர் அலுவலகங்கள், சென்னையில் உள்ள அம்மா உணவகங்கள் போன்ற மக்கள் அதிகமாக கூடும் இடங்களில் மின்னணு விளம்பரத் திரைகள் (LED TV) நிறுவப்பட்டு, இதன் மூலம் அரசின் சாதனை குறித்த விளம்பரப் பணிகளை இப்பிரிவு மேற்கொண்டு வருகிறது.

## அலுவலர்களின் பணிமதிப்பீடு

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்களின் பணிகளான, செய்தியாளர் கூட்டம், வெற்றிக் கதைகள்,

வீடியோ படக்காட்சிகள், திரையரங்கு ஆய்வுகள், சிறப்பு வெளியீடுகள் பிரசுரித்தல் உள்ளிட்ட பல்வேறு பணிகளை ஆய்வு செய்து, அதற்கென மதிப்பெண்கள் வழங்கி அவர்களின் பணி மாதந்தோறும் அமைக்கப்பட்டுள்ள குழு மூலம் தரமதிப்பீடு செய்வதன் மூலம் மாவட்ட செய்தி – மக்கள் தொடர்பு அலுவலர்களுக்கிடையே ஒரு உத்வேகம் உருவாக்கப்பட்டு வருகிறது.

## மின்னணு விளம்பரத்திரை வீடியோ

மின்னணு விளம்பரத்திரை வீடியோ வாகனம் நவீன தொழில்நுட்ப முறையில் மின்னணு விளம்பரத் திரை பொருத்திய புதிய 32 வீடியோ வாகனங்கள் உருவாக்கும் பணி நடைபெற்று வருகிறது. பொதுமக்களின் கண்ணையும், கருத்தையும் கவரும் வகையில் நவீன வசதிகளுடன் உருவாக்கப்பட்டு வரும் மின்னணு விளம்பரத்திரை பொருத்தப்பட்ட வீடியோ வாகனம் மூலம் பகல், இரவு மற்றும் அனைத்து நேரங்களிலும் மக்கள் கூடும் இடங்கள், அரசு விழாக்கள் நடைபெறும் இடங்கள் மற்றும் அனைத்து இடங்களிலும் அரசின் திட்டங்கள், சாதனைகள் மக்கள் அறிந்து கொள்ளும் வகையில் விளம்பரப்படுத்தப்படும்.

இவ்விளம்பரக் காட்சி ஊர்திகளின் அன்றாட நடமாட்டத்தை மின்னணு இடம்காட்டி வசதி கருவி (GPS) மூலம் கண்காணிக்கும் பணியை இப்பிரிவு மேற்கொண்டு வருகிறது.

**“ஏழை, எளிய மக்களை பாதுகாக்கும் அரசாக, அவர்களை கை தூக்கிவிடும் அரசாக எனது தலைமையிலான அரசு விளங்கி வருகிறது”**

**– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்**
**புரட்சித்தலைவி அம்மா அவர்கள்**

## விளம்பரம்

தமிழ்நாடு அரசின் சாதனைகள், திட்டங்கள், கொள்கைகள் மற்றும் சமூகநலப் பணிகளை, மக்கள் அறிந்துகொள்ளச் செய்யும் வகையில் நாளிதழ்கள், காலமுறை இதழ்கள் மற்றும் மின்னணு ஊடகங்கள் ஆகியவற்றில் விளம்பரங்களை வெளியிடும் பணியில் இத்துறை முனைப்புடன் செயலாற்றி வருகிறது. இதே போன்று தமிழ்நாட்டின் வளர்ச்சிப் பணிகள் மற்றும் ஏனைய பணிகளின் பொருட்டு வெளியிடப்படும் ஒப்பந்தப்புள்ளி விளம்பரங்களையும் இத்துறை வெளியிட்டு வருகிறது.

தமிழ்நாடு அரசின் அனைத்துத் துறைகள், வாரியங்கள், பல்கலைக்கழகங்கள் மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்களின் விளம்பரங்களை, நாளிதழ்கள் மற்றும் காலமுறை இதழ்களில் வெளியிடும் மையமாக இத்துறை செயலாற்றி வருகிறது.

மேலும், அரசாணைக்கேற்ப விளம்பரத்தின் இந்திய வர்த்தக இதழிலும் (Indian Trade Journal) விளம்பரங்கள் வெளியிடப்படுகின்றன.

## ஒப்பந்தப்புள்ளி விளம்பரங்கள்

நவீன மின்னணு தொழில்நுட்ப வசதிகளைப் பயன்படுத்தி, கூடுதல் செலவு ஏதுமின்றி அனைத்து அரசு விளம்பரங்களும் மக்களை எளிதில் சென்றடையும் வகையில், ஒப்பந்தப்புள்ளி மற்றும் வரைகலை விளம்பரங்கள் தேசியத் தகவல் மையத்தின் வழியாக, தமிழக அரசின் www.tn.gov.in என்ற இணையதளத்தில் வெளியிடப்படுகின்றன. www.tenders.tn.gov.in என்ற இணையதள முகவரியிலிருந்து ஒப்பந்தப்புள்ளிப் படிவங்களை விலையேதுமின்றிப் பதிவிறக்கம் செய்ய முடியும். ஒப்பந்தப்புள்ளி விளம்பரங்கள் பத்திரிகைகளில் வெளியிடப்படுவதோடு, இணையதளத்திலும் வெளியிடப்படுவதால், அரசின் வெளிப்படையான நிருவாகம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அதன் மூலம் தகுதியான அனைவரும் தமிழக அரசு கோரும் ஒப்பந்தப்புள்ளிகளில் பாகுபாடு இன்றிப் பங்கேற்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

## ஒப்பந்தப்புள்ளி செய்தி மலர்கள்

அரசின் செயல்பாடுகள் அனைத்தையும் மக்கள் அறிந்து கொள்ளும் வகையில், அவை வெளிப்படையாக இருத்தல் வேண்டும் என்ற கொள்கையின் அடிப்படையில், **1998** ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப் புள்ளிச்சட்டம் மற்றும் **2000**ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளி விதிகள் இயற்றப்பட்டு, அதன்

அடிப்படையில் மாவட்ட / மாநில ஒப்பந்தப்புள்ளி செய்திமலர்கள் வாரந்தோறும் வெளியிடப்படுகின்றன.

ரூ.5 லட்சத்திற்கு மேல் ரூ.10 லட்சம் வரையிலான கொள்முதல் மதிப்பு மற்றும் ரூ.10 லட்சத்திலிருந்து ரூ.25 லட்சம் வரையிலான பணிகளின் மதிப்பு ஆகியவை பற்றிய ஒப்பந்தப்புள்ளிகள், மாவட்ட ஒப்பந்தப்புள்ளி செய்திமலரிலும், ரூ.10 லட்சத்திற்கு மேற்பட்ட கொள்முதல் மதிப்பு மற்றும் ரூ. 25 லட்சத்திற்கு மேற்பட்ட பணிகளின் மதிப்பு ஆகியவை பற்றிய ஒப்பந்தப்புள்ளிகள், மாநில ஒப்பந்தப்புள்ளி செய்திமலரிலும் வெளியிடப்படுகின்றன. இம்மலர்களில், ஒப்பந்தப்புள்ளிகள் மீது மேற்கொண்ட முடிவுகளும் வெளியிடப்பட்டு வருகின்றன.

**“வேறு எந்தக் கலை வடிவத்தையும் விட எளிதாக மக்களை ஈர்க்கும் வலிமை திரைப்படத்திற்கு இருக்கிறது”**

**– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்**
**புரட்சித்தலைவி அம்மா அவர்கள்**

# திரைப்பட விருதுகள், மானியம் மற்றும் சின்னத்திரை விருதுகள்

## திரைப்பட விருதுகள்

மனித நல்லுணர்வுகளைப் பிரதிபலிக்கும் திரைப்படங்களை ஊக்கப்படுத்தும் வகையில், சிறந்த தமிழ்த் திரைப்படங்கள், சிறந்த நடிகர், சிறந்த நடிகையர் மற்றும் சிறந்த தொழில்நுட்பக் கலைஞர்களுக்குத் திரைப்பட விருதுகள் தமிழ்நாடு அரசால் வழங்கப்பட்டு வருகின்றன. விருதுகள் பெறுவதற்குத் தகுதியான சிறந்த திரைப்படங்கள், நடிகர், நடிகையர் மற்றும் தொழில்நுட்பக் கலைஞர்களைத் தேர்வு செய்வதற்காக, தேர்வுக்குழு அமைக்கப்பட்டுள்ளது.

குழு தேர்ந்தெடுக்கும் சிறந்த திரைப்படங்களுக்கு கீழ்க்காணும் பரிசுகள் வழங்கப்படுகின்றன.

| | | | |
|---|---|---|---|
| 1. | முதல் பரிசு | – | ரூ.2 லட்சம் ரொக்கம், நினைவுப்பரிசு மற்றும் சான்றிதழ் |
| 2. | இரண்டாம் பரிசு | – | ரூ.1 லட்சம் ரொக்கம், நினைவுப்பரிசு மற்றும் சான்றிதழ் |

3. மூன்றாம் பரிசு – ரூ.75 ஆயிரம் ரொக்கம், நினைவுப்பரிசு மற்றும் சான்றிதழ்

4. சிறப்புப் பரிசு – ரூ.75 ஆயிரம் ரொக்கம், நினைவுப்பரிசு மற்றும் சான்றிதழ்

மகளிரைப்பற்றிஉயர்வாகச்சித்திரிக்கும்திரைப்படத்திற்கு சிறப்புப் பரிசாக ரூ.1.25 லட்சம் ரொக்கம், நினைவுப்பரிசு மற்றும் சான்றிதழும் வழங்கப்படுகின்றன.

சிறந்த நடிகர், நடிகையர் மற்றும் சிறந்த தொழில்நுட்பக் கலைஞர்களுக்கு தலா 5 பவுன் தங்கப்பதக்கம், நினைவுப்பரிசு மற்றும் சான்றிதழும் வழங்கப்படுகின்றன.

ஆண் மற்றும் பெண் குரல்வளக் கலைஞர்கள் (Dubbing Artists), சிறந்த குணச்சித்திர நடிகர், சிறந்த குணச்சித்திர நடிகை, சிறந்த நகைச்சுவை நடிகர், சிறந்த நகைச்சுவை நடிகை ஆகியோருக்கும் விருதுகள் வழங்கப்படுகின்றன.

## கலைத்துறை வித்தகர் விருதுகள்

தமிழ்த்திரை உலகில் தமது எழுத்தாலும், நடிப்பாலும் தனிமுத்திரை பதித்த பேரறிஞர் அண்ணா, கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன், தியாகராஜ பாகவதர், ராஜாசாண்டோ, மக்கள் திலகம் எம்ஜிஆர், கவிஞர் கண்ணதாசன், நடிகர் திலகம் சிவாஜி கணேசன் ஆகியோரின் பெயர்களில் கலைத்துறை வித்தகர் விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன. இவ்விருதுகளைப் பெறுகின்ற கலைத்துறை வித்தகர்களுக்கு தலா 5 பவுன் தங்கப்பதக்கம் மற்றும் நினைவுப்பரிசு ஆகியவை வழங்கப்படுகின்றன.

## அரசு திரைப்பட மானியம்

சிறிய முதலீட்டில் திரைப்படம் தயாரிப்பவர்களை ஊக்குவிக்கும் வகையில், குறைந்த செலவில் தயாரித்து வெளியிடப்பட்ட சமூகப் பொறுப்பும், அக்கறையும் நிரம்பிய, தரமான தமிழ்த் திரைப்படங்களுக்கு அரசு மானியம் வழங்கும் திட்டத்தினை இத்துறை செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின் கீழ் தகுதியான திரைப்படங்களைத் தேர்ந்தெடுப்பதற்கு அரசால் தேர்வுக்குழு அமைக்கப்பட்டு, தேர்ந்தெடுக்கப்படும் ஒவ்வொரு படத்திற்கும் ரூ.7 லட்சம் மானியமாக வழங்கப்படுகிறது.

## சின்னத்திரை விருதுகள்

மக்களின் அன்றாட வாழ்க்கையில் மிகப்பெரும் பங்கு வகிக்கும் சின்னத்திரையில் ஒளிபரப்பாகும் தொடர்கள், அதில் பங்கேற்கும் நடிகர், நடிகையர் மற்றும் தொழில்நுட்பக் கலைஞர்களுக்கு, சின்னத்திரை விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

| | | |
|---|---|---|
| 1. சிறந்த நெடுந்தொடருக்கு முதல் பரிசு | – | ரூ.2 லட்சம் ரொக்கம், நினைவுப் பரிசு மற்றும் சான்றிதழ் |
| 2. சிறந்த நெடுந்தொடருக்கு இரண்டாம் பரிசு | – | ரூ.1 லட்சம் ரொக்கம், நினைவுப் பரிசு மற்றும் சான்றிதழ் |

மேலும், சிறந்த கதை ஆசிரியர், சிறந்த திரைக்கதை ஆசிரியர், சிறந்த உரையாடல் ஆசிரியர், சிறந்த இயக்குநர், சிறந்த ஒளிப்பதிவாளர், சிறந்த படத் தொகுப்பாளர், சிறந்த கதாநாயகன், சிறந்த கதாநாயகி, சிறந்த குணசித்திர நடிகர், சிறந்த குணசித்திர நடிகை, சிறந்த வில்லன் நடிகர், சிறந்த வில்லி நடிகை, சிறந்த குழந்தை நட்சத்திரம், சிறந்த பின்னணி இசையமைப்பாளர், சிறந்த குரல் வளக் கலைஞர் (ஆண் மற்றும் பெண்), சிறந்த தந்திரக் காட்சியாளர் ஆகியோருக்கு தலா 3 பவுன் தங்கப் பதக்கம், நினைவுப் பரிசு மற்றும் சான்றிதழும் வழங்கப்படுகிறது.

மேலும், ஆண்டின் சிறந்த சாதனையாளர், சிறந்த வாழ்நாள் சாதனையாளர் ஆகியோருக்கு தலா ரூ.1 லட்சம் ரொக்கம், நினைவுப் பரிசு மற்றும் சான்றிதழும் வழங்கப்படுகின்றன.

திரைப்பட உலகிற்குப் பெருமை சேர்க்கும் வகையில் இந்திய சினிமா நூற்றாண்டு விழாவினை சிறப்பான முறையில் நடத்துவதற்கு ஏதுவாக இந்தியாவிலேயே முதன் முறையாக தமிழ்நாடு அரசின் சார்பில் இவ்விழாவினை நடத்திய தென்னிந்திய திரைப்பட வர்த்தக சபைக்கு ரூ.10 கோடி மானியமாக வழங்கப்பட்டது. இவ்விழா சென்னையில் 21.09.2013 முதல் 24.09.2013 வரை நடைபெற்றது. இவ்விழாவில் மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மற்றும் பிற மாநில முதலமைச்சர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

சென்னையில் 18.12.2014 முதல் 25.12.2014 வரை நடைபெற்ற பன்னிரண்டாவது சென்னை சர்வதேச திரைப்பட விழாவிற்கு தமிழக அரசு சார்பில் ரூ.50 லட்சம் மானியமாக வழங்கப்பட்டது.

# செய்தி மக்கள் தொடர்புத்துறையின் நான்காண்டு சாதனைகள்

- பத்திரிகையாளர் ஓய்வூதியம் ரூ.5,000/– லிருந்து ரூ.7,500 ஆக உயர்வு.
- பத்திரிகையாளர் குடும்ப ஓய்வூதியம் ரூ.2,500/– லிருந்து ரூ.4,500 ஆக உயர்வு.
- ரூ.78 லட்சம் மதிப்பீட்டில் செய்தியாளர் ஊடக மையம் மற்றும் மென்பொருள் வசதியுடன் இணைய மையம்.
- முதன்முதலாக தலைமைச் செயலகத்தில் ரூ.25 லட்சம் மதிப்பீட்டில் தகவல் மற்றும் சாதனைகள் தொகுப்பு வங்கி உருவாக்கம்.
- தலைமைச் செயலகத்தின் பிரதான நுழைவு வாயிலின் இருபக்கங்களிலும் புகைப்பட மாடம் ரூ.14 லட்சம் மதிப்பீட்டில் புனரமைப்பு.
- சேலம் மாவட்டம், சங்ககிரியில் ரூ.60 லட்சம் மதிப்பீட்டில் விடுதலைப் போராட்ட வீரர் தியாகி தீரன் சின்னமலை அவர்களுக்கு நினைவுச்சின்னம்.
- திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டையில் ரூ.50 லட்சம் மதிப்பீட்டில் தியாகி வாஞ்சிநாதன் அவர்களுக்கு நினைவுமண்டபம்.
- கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவிலில் மார்ஷல் நேசமணி அவர்களுக்கு ரூ.48.70 லட்சம் மதிப்பீட்டில் மணிமண்டபம்.

## செய்தி மக்கள் தொடர்புத்துறையின் நான்காண்டு சாதனைகள்...

- பேரறிஞர் அண்ணா நினைவிட வளாகத்தில் 3 ஏக்கர் பரப்பளவில் ரூ.7.50 கோடி மதிப்பீட்டில் இயற்கை எழில் கொஞ்சும் பூங்கா சென்னை மாநகராட்சி மூலம் அமைப்பு.

- சென்னை, இராயபுரத்தில் சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் மற்றும் சுயமரியாதைச் சுடரொளி ஜீவரத்தினம் ஆகியோருக்கு ரூ.2.34 கோடி மதிப்பீட்டில் மணிமண்டபங்கள் மற்றும் நூலகம்.

- தமிழ்நாடு என பெயர் சூட்டுவதற்காக இன்னுயிர் நீத்த தியாகி சங்கரலிங்கனார் அவர்களுக்கு விருதுநகர் மாவட்டத்தில் ரூ.77 லட்சம் மதிப்பீட்டில் மணிமண்டபம்.

- சென்னை, ஓமந்தூரார் அரசினர் தோட்ட வளாகத்தில் ரூ.63 கோடி மதிப்பீட்டில் புதிய கலையரங்கம் மற்றும் மாநிலச் செய்தி நிலையம்.

- மாற்றுத்திறனாளிகள் நினைவகங்களை எளிதாகச் சென்று பார்வையிட ஏதுவாக ரூ.39.56 லட்சம் மதிப்பீட்டில் சாய்வு நடைபாதைகள்.

- சிவகங்கை மாவட்டம், சிவகங்கையில் வீரமங்கை வேலு நாச்சியார் அவர்களுக்கு ரூ.60 லட்சம் மதிப்பீட்டில் நினைவு மண்டபம்.

# செய்தி மக்கள் தொடர்புத்துறையின் நான்காண்டு சாதனைகள்...

- சிவகங்கையில் வீரமங்கை வேலுநாச்சியார் நினைவு மண்டப வளாகத்தில் ரூ.27.50 லட்சம் மதிப்பீட்டில் வீரத்தாய் குயிலிக்கு நினைவுச்சின்னம்.
- தூத்துக்குடி மாவட்டம், கயத்தாறில் ரூ.1.20 கோடி மதிப்பீட்டில் வீரபாண்டிய கட்டபொம்மன் அவர்களுக்கு மணிமண்டபம்.
- திண்டுக்கல் மாவட்டத்தில் ஹைதர் அலி மற்றும் திப்பு சுல்தான் ஆகியோர் நினைவாக, ஒரே வளாகத்தில் ரூ.1.30 கோடி மதிப்பீட்டில் மணிமண்டபங்கள்.
- மனுநீதி சோழன் அவர்களுக்குத் திருவாரூரில் ரூ.1.10 கோடி மதிப்பீட்டில் நினைவு மண்டபம்.
- கடலூர் மாவட்டம், சிதம்பரத்தில் ரூ.1.15 கோடி மதிப்பீட்டில் சுவாமி சகஜானந்தா அவர்களது நினைவாக மணிமண்டபம்.
- இரட்டை மலை சீனிவாசன், வீரமங்கை வேலுநாச்சியார் பிறந்த நாளினை அரசு விழாவாகக் கொண்டாட அரசு ஆணை.
- கன்னியாகுமரி மாவட்டம் தாய்த் தமிழகத்துடன் இணைந்த நவம்பர் 1–ஆம் நாளை நினைவு கொள்ளும் வகையில் குமரித் தந்தை மார்ஷல் நேசமணி அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து அரசு விழா.
- ரூ.6.23 கோடி மதிப்பீட்டில் தமிழரசு அச்சகம் மற்றும் அலுவலகத்திற்கு புதிய கட்டடம்.
- ரூ.4 கோடி மதிப்பீட்டில் நவீன நான்கு வண்ண வெப்ஆப்செட் இயந்திரம்.

## செய்தி மக்கள் தொடர்புத்துறையின் நான்காண்டு சாதனைகள்...

- கடந்த நான்கு ஆண்டுகளில் 35 அரசு பொருட்காட்சிகள் நடத்தப்பட்டு அரசுக்கு ரூ.11 கோடியே 92 லட்சம் வருவாய். வருகை தந்த பார்வையாளர்கள் – 69,06,822 நபர்கள்.
- 2012 மற்றும் 2013ஆம் ஆண்டுகளில் புதுடெல்லியில் நடைபெற்ற மலர்ப்பேரணி விழாக்களில் தமிழ்நாடு அரசு பங்கேற்று முதல் பரிசு பெற்றது.
- 2014ஆம் ஆண்டு, புதுடெல்லியில் நடைபெற்ற குடியரசுத் திருநாள் அலங்கார ஊர்திகள் அணிவகுப்பில், பொங்கல் விழாவினைச் சித்திரிக்கும் தமிழ்நாடு அலங்கார ஊர்தி முதல் முறையாக, இரண்டாம் பரிசு பெற்றது.
- அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களில் ரூ.68 லட்சம் மதிப்பீட்டில் மின்னணு விளம்பரத் திரைகள் (Digital Display Screens).
- ரூ.20.80 கோடி மதிப்பீட்டில் அனைத்து மாவட்டங்களுக்கும் மின்னணு விளம்பரத்திரை வாகனங்கள்.
- ரூ.9.50 கோடி மதிப்பீட்டில் அனிமேஷன் மற்றும் காட்சிப் பயன் எனும் புதிய பட்டயப்படிப்புகள் 2013–2014 கல்வியாண்டில் துவக்கம்.
- கடந்த நான்கு ஆண்டுகளில் அரசின் திட்டங்களை மக்களுக்கு விளக்கி கூறும் வகையில் 116 வீடியோ செய்தி மலர்களும் 45 குறும்பாடல்கள் கொண்ட 6 தொகுப்புகளும் மற்றும் 4 வார செய்தி தொகுப்புகளும் வெளியிடப்பட்டுள்ளன. ❖

**“தொழில், தொண்டாகலாம். ஆனால் தொண்டு தொழில் ஆகிவிடக் கூடாது”**

**– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்**
**புரட்சித்தலைவி அம்மா அவர்கள்**

## திரைப்படத்துறையினர் நலவாரியம்

திரைப்படத்துறையினர், சின்னத்திரையினர் மற்றும் அதனைச் சார்ந்துள்ள தொழிலாளர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் நலமுடன் வாழவேண்டுமென்பதற்காக தமிழக அரசால் திரைப்படத்துறையினர் நலவாரியம் தோற்றுவிக்கப்பட்டு அத்துறையினர் பயன்பெறும் வகையில் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

திரைப்படத்துறையின் 41 சங்கங்களைச் சேர்ந்த திரைப்படம் / சின்னத்திரை பணியாளர்கள், திரைப்படத் துறையினர் நலவாரியத்தில் உறுப்பினர்களாகச் சேரத் தகுதியுடையவர்கள் ஆவர். இதுவரை சுமார் 20,000 பேர் உறுப்பினர்களாகச் சேர்ந்துள்ளனர்.

திரைப்படத்துறையின் பல்வேறு சங்கங்களைச் சார்ந்த உறுப்பினர்களுக்குக் கீழ்க்கண்ட நலத்திட்ட உதவிகள் வழங்கப் படுகின்றன.

| வ. எண் | **நலத்திட்ட உதவிகள்** | **உதவித்தொகை** |
|---|---|---|
| 1 | **விபத்து ஈட்டுறுதித் திட்டம்**<br>(அ) விபத்தினால் ஏற்படும் மரணம்<br>(ஆ) விபத்தினால் ஊனம் ஏற்பட்டால் ஊனத்தின் தன்மைக்கேற்ப | <br>ரூ.1,00,000<br>ரூ.10,000 முதல்<br>ரூ.1,00,000 வரை |
| 2 | இயற்கை மரணத்திற்கான உதவித்தொகை | ரூ.15,000 |
| 3 | ஈமச் சடங்கு மரணத்திற்கான உதவித் தொகை | ரூ.2,000 |
| 4 | **கல்வி உதவித் தொகை** | |
| அ) | 10 ஆம் வகுப்பு படித்துவரும் பெண் குழந்தைகளுக்கு | ரூ.1,000 |
| ஆ) | 10 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு | ரூ.1,000 |
| இ) | 12 ஆம் வகுப்பு படித்து வரும் பெண் குழந்தைகளுக்கு | ரூ.1,500 |
| | 12 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவருக்கு | ரூ.1,500 |
| ஈ) | முறையான பட்டப்படிப்பு பயிலும் மாணவர்களுக்கு | ரூ.1,500 |
| | மாணவர் விடுதி வசதியுடன் முறையான பட்டப்படிப்பிற்கு | ரூ.1,750 |
| உ) | முறையான பட்ட மேற்படிப்பிற்கு | ரூ.2,000 |
| | மாணவர் விடுதி வசதியுடன் முறையான பட்டப் மேற்படிப்பிற்கு | ரூ.3,000 |
| ஊ) | தொழிற்கல்வி பட்டப் படிப்பிற்கு | ரூ.2,000 |
| | மாணவர் விடுதி வசதியுடன் தொழிற்கல்வி பட்டப் படிப்பிற்கு | ரூ.4,000 |

| வ. எண் | நலத்திட்ட உதவிகள் | உதவித்தொகை |
|---|---|---|
| ஏ) | தொழிற்கல்வி பட்ட மேற்படிப்பு | ரூ.4,000 |
| | மாணவர் விடுதி வசதியுடன் தொழிற்கல்வி பட்ட மேற்படிப்பிற்கு | ரூ.6,000 |
| ஏ) | ஐ.டி.ஐ. தொழில் பயிற்சி அல்லது பல்தொழில் பயிற்சிப் படிப்பிற்கு | ரூ.1,000 |
| | மாணவர் விடுதி வசதியுடன் ஐ.டி.ஐ அல்லது பல்தொழில் பயிற்சிப் படிப்பிற்கு | ரூ.1,200 |
| 5 | திருமண உதவித் தொகை | ரூ.2,000 |
| 6 | மகப்பேறு உதவித் தொகை | ரூ.6,000 |
| 7 | மூக்குக் கண்ணாடிச் செலவுத் தொகையை ஈடுசெய்தல் | ரூ.500 |
| 8 | முதியோர் ஓய்வூதியம் (மாதமொன்றுக்கு) | ரூ.400 |

கடந்த ஆண்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் வரவு செலவு திட்டத்தில் திரைப்படத் துறையினர் நலவாரிய செயல்பாடுகளுக்காக ரூ.20.00 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதில் திரைப்படத் துறையினர் சங்கங்களைச் சேர்ந்த 303 உறுப்பினர்களுக்கு ரூ.8.00 லட்சம் மதிப்பிலான, பல்வேறு நலத்திட்ட உதவித்தொகைகள் வழங்கப்பட்டுள்ளன.

திரைப்படத்துறையினர் நலவாரியத்திற்கு வரப்பெற்ற விண்ணப்பங்களைப் பரிசீலனை செய்து, பயனாளிகளைத் தேர்வு செய்து, நலத்திட்ட உதவிகளை வழங்குவதற்கு திரைப்படத் துறையினர் நலவாரியத்திற்குத் தலைவர் மற்றும் உறுப்பினர்களை நியமித்துத் தமிழக அரசு ஆணை பிறப்பித்துள்ளது. திரைப்படத் துறையினர் நலவாரியத்திற்கு மாண்புமிகு செய்தி மற்றும்

சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் அவர்கள் தலைவராகவும், இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை அவர்கள் உறுப்பினர் / செயலாளராகவும் மற்றும் கீழ்க்கண்டவர்கள் உறுப்பினர்களாகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

| **வ. எண்** | **அலுவல் சாரா உறுப்பினர்கள்** | **வ. எண்** | **அலுவல் சார்ந்த உறுப்பினர்கள்** |
|---|---|---|---|
| **1** | **(திருவாளர்கள்)**<br>ஆர்.வி. உதயகுமார்<br>தயாரிப்பாளர் / இயக்குநர் | 1 | தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் |
| **2** | பி. வாசு, இயக்குநர் | 2 | நிதித்துறை செயலாளர் |
| **3** | லியாகத் அலிகான்<br>வசனகர்த்தா | 3 | வருவாய்த்துறை செயலாளர் |
| **4** | மோகன் காந்திராமன்<br>தயாரிப்பாளர் / இயக்குநர் | 4 | தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை செயலாளர் |
| **5** | ராமராஜன்<br>நடிகர் / தயாரிப்பாளர்/ இயக்குநர் | 5 | வணிகவரித்துறை ஆணையர் |
| **6** | டி.கே.கலா<br>நடிகை மற்றும் பாடகி | 6 | உள்துறை துணைச் செயலாளர் (சினிமா) |
| **7** | எல்.ஆர்.ஈஸ்வரி<br>திரைப்பட பின்னணி பாடகி | 7 | தொழிலாளர் நலத்துறை ஆணையர் |
| | | 8 | நில நிருவாகத்துறை ஆணையர் |

இவ்வாரியம் பெறப்படும் விண்ணப்பங்களைப் பரிசீலித்துப் பயனாளிகளைத் தேர்வு செய்யும்.

**"அரசின் ஆக்கப்பணிகளை, மக்கள் நலத் திட்டங்களை, மக்களிடையே எடுத்துச் செல்ல திரைப்படங்கள் பெரிதும் உதவுகின்றன"**

**– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்**
**புரட்சித்தலைவி அம்மா அவர்கள்**

# தமிழ்நாடு திரைப்படப்பிரிவு

## செய்திப்படப்பிடிப்பு

தமிழ்நாடு திரைப்படப்பிரிவு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு தமிழக அமைச்சர் பெருமக்கள், முக்கிய பிரமுகர்கள் கலந்து கொள்ளும் நிகழ்ச்சிகள் மற்றும் அரசின் முக்கியமான நிகழ்ச்சிகளை வீடியோ மூலம் ஒளிப்பதிவு செய்து அவற்றைத் தொகுத்துச் செய்திமலராக வெளியிடும் விளம்பரப் பணிகளை மேற்கொண்டு வருகிறது.

## குறும்பாடல்கள் மற்றும் குறும்படங்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் முத்தான திட்டங்கள் குறித்து 75 சிறப்பு குறும்படங்கள் தயாரிக்கப்பட்டு தமிழகத்தின் அனைத்து டிஜிட்டல் திரையரங்குகளிலும் திரையிடப்பட்டன. மேலும், தமிழ்நாடு திரைப்படப் பிரிவின் மூலம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கலந்து கொண்ட 139 காணொலிக்காட்சி நிகழ்ச்சிகள் ஆகியன தொகுக்கப்பட்டு தமிழ்நாடு அரசு கேபிள் டிவி கார்ப்பரேஷன் மூலம் பொதுமக்களுக்கு ஒளிபரப்பப்பட்டு வருகின்றன.

## வார செய்தித் தொகுப்புகள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் காணொலிக் காட்சி மூலம் துவக்கப்பட்ட புதிய திட்டங்களை செய்தித் தொகுப்புகளாக தயாரித்து குறுந்தகடுகளில் பதிவேற்றம் செய்து வாரந்தோறும் கள விளம்பரப் பணிகளை மேற்கொள்ள அனைத்து மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்களுக்கு அனுப்பப்பட்டு மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

## படக்காட்சி செய்திமலர்கள்

தமிழ்நாடு திரைப்படப்பிரிவின் முக்கியப் பணியாக தமிழக அரசின் மக்கள் நலத் திட்டங்கள், அறிவிப்புகள், வளர்ச்சிப் பணிகள் ஆகியவற்றை உள்ளடக்கிய படக்காட்சி செய்தி மலர்களைத் தயாரித்து அனைத்து டிஜிட்டல் சினிமா திரையரங்குகளில் வெளியிடுவது மற்றும் குறுந்தகடுகளில் பதிவேற்றம் செய்து அனைத்து மாவட்டச் செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்களுக்கும் அனுப்பி, பொதுமக்கள் கூடும் இடங்களில் மாவட்டச் செய்தி மக்கள் தொடர்பு அலுவலக வீடியோ வாகனங்கள் மூலமாகக் கள விளம்பரப் பணியைச் செய்து வருகிறது.

தொழில்நுட்ப வளர்ச்சிகேற்றவாறு படக்காட்சி செய்தி மலர்களை LED திரைக்கு பதிவேற்றம் செய்யப்பட்டு அனைத்து மக்கள் கூடும் அரசு அலுவலகங்களிலும், அம்மா

உணவகங்களிலும் திரையிட்டு மக்களுக்கு அரசுத் திட்டங்கள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரின் நிகழ்ச்சிகள் அனைத்தும் ஒளிப்பதிவு செய்யப்பட்டு அதனை தலைமைச் செயலகத்தில் உள்ள ஊடக மையத்தின் மூலம் அனைத்து ஊடகங்களுக்கும் படக்காட்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இதற்கென ஒரு உயர்தொழில்நுட்ப மடிக்கணினி ஒன்று வாங்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகிறது.

கடந்த நான்கு ஆண்டுகளில் அரசின் திட்டங்களை மக்களுக்கு விளக்கி கூறும் வகையில் 116 படக்காட்சி செய்தி மலர்களும் 45 குறும்பாடல்கள் கொண்ட 6 தொகுப்புகளும் மற்றும் 4 வார செய்தி தொகுப்புகளும் வெளியிடப்பட்டுள்ளன.

| வ. எண் | படக்காட்சி செய்திமலர்கள் |
|---|---|
| 1. | மலர்ந்தது அம்மா அவர்களின் பொற்கால ஆட்சி |
| 2. | மாற்றம் தந்த மக்களுக்கு ஏற்றம் தரும் அரசின் 100 நாள் சாதனைகள் |
| 3. | அம்மாவும் அன்னைத் தமிழும் |
| 4. | அம்மாவின் செயற்கரிய செயல்பாட்டில் சிகரம் தொட்ட பள்ளிக் கல்வித் துறை |
| 5. | அம்மா காட்டும் கல்விப்பாதை |
| 6. | அம்மா உணவகம் |

| வ. எண் | படக்காட்சி செய்திமலர்கள் |
|---|---|
| 7. | அம்மாவின் கல்விப்புரட்சி |
| 8. | அம்மா குடிநீர் |
| 9. | கல்வித்தாய் |
| 10. | அம்மா திட்டம் |
| 11. | வரமாய் வந்தது அம்மாவின் ஆட்சி (பாடல்) |
| 12. | அம்மா உப்பு |
| 13. | அம்மா உப்பு (பாடல்) |
| 14. | மாற்றம் தந்த மக்களுக்கு ஏற்றம் தந்த ஆணைகள் |
| 15. | சுதந்திரத் திருநாள் 2011 |
| 16. | எளியோர் ஏற்றம் பெற ஏற்றமிகு நிதிநிலை அறிக்கை |
| 17. | நாடு நலம் பெற நலத் திட்டங்கள் |
| 18. | தானே புயல் |
| 19. | பள்ளிக் கல்வியில் அம்மாவின் சொல்லிமாளாச் சாதனைகள் |
| 20. | மீனவர் நலன் காக்கும் மக்கள் அரசு |
| 21. | நூறாண்டு பேசும் ஓராண்டு சாதனை |
| 22. | உங்களால் நான் (சுதந்திர தினத் திருநாள் 2012) |
| 23. | டெங்குவை ஒழிப்போம் |
| 24. | டெங்குவை ஒழிப்போம் (பகுதி 2) |
| 25. | பென்னி குவிக் |
| 26. | ஒரு கையெழுத்து மாறியது தலையெழுத்து |
| 27. | அன்பின் அரசாங்கம் |
| 28. | சாதனை புரிந்த ஈராண்டு, சரித்திரம் பேசும் பல்லாண்டு (பகுதி 1) |

| வ. எண் | படக்காட்சி செய்திமலர்கள் |
|---|---|
| 29 | சாதனை புரிந்த ஈராண்டு, சரித்திரம் பேசும் பல்லாண்டு (பகுதி 2) |
| 30 | சாதனை புரிந்த ஈராண்டு, சரித்திரம் பேசும் பல்லாண்டு (குறும்பாடல்கள்) |
| 31 | விதி 110 (பகுதி 1 மற்றும் 2) |
| 32 | புதுமைகள் படைக்கும் புரட்சித்தலைவி |
| 33 | உயிர் காத்த உத்தம தலைவி |
| 34 | மாவட்ட ஆட்சியர் மாநாடு – 2013 |
| 35. | காவிரி நீரின் உரிமையை தமிழகத்துக்கு பெற்றுத்தந்தது |
| 36. | விலையில்லா மிதிவண்டி வழங்கும் திட்டம் |
| 37. | காவிரி டெல்டா மேம்பாட்டுத் திட்டம் |
| 38. | முதல் தலைமுறை |
| 39. | விலையில்லாக் கறவை மாடு |
| 40. | சூரிய சக்தியுடன் கூடிய பசுமை வீடு திட்டம் |
| 41. | அரசு கேபிள் டிவி சேவை மூலம் அதிக சேனல்களை குறைந்த கட்டணத்தில் வழங்குதல் |
| 42. | விலையில்லா அரிசி |
| 43. | ஒரு கிலோ அரிசி ரூ.20/– |
| 44. | தாய்ப்பாசம் |
| 45. | தாலிக்குத் தங்கம் |
| 46. | நடமாடும் மருத்துவமனைத் திட்டம் |
| 47. | உழவர் பெருவிழா |
| 48. | மாணவ – மாணவியர் காவலர் |
| 49. | பண்ணைப்பசுமை நுகர்வோர் மலிவு விலைக் காய்கறிக்கடை |

| வ. எண் | படக்காட்சி செய்திமலர்கள் |
|---|---|
| 50. | தமிழ்நாடு அரசின் காவலர்களுக்கான புதிய குடியிருப்புகள் திட்டம் |
| 51. | இலவச நாப்கின் வழங்கும் திட்டம் |
| 52. | தொட்டில் குழந்தை திட்டம் |
| 53. | முதலமைச்சரின் பெண்குழந்தை பாதுகாப்புத் திட்டம் |
| 54. | வறட்சியால் பாதிக்கப்பட்ட டெல்டா மற்றும் டெல்டா அல்லாத மாவட்டங்களுக்கு நிவாரணம் |
| 55. | விலையில்லா மின் விசிறி, மிக்சி மற்றும் கிரைண்டர் மாணவ, மாணவிகளுக்கான மடிக்கணினி |
| 56. | விலையில்லா மடிக்கணினி |
| 57. | ஜெருசலேம் தெய்வீக சுற்றுலா செல்லும் கிறிஸ்தவர்களுக்கு மானியம் |
| 58 | உழவர் பாதுகாப்புத் திட்டம் |
| 59. | விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டம் |
| 60. | அனைத்து திட்டங்களையும் முகாமில் வாழும் இலங்கைத் தமிழர்களுக்கு விரிவுபடுத்தியது |
| 61. | விதவை, திருமணம் ஆகாதவர்கள், ஓய்வூதியதாரரின் விதவை மகள், குடும்ப நலத்திட்டத்தின் கீழ் வாழ்நாள் ஓய்வூதியம் உயர்த்தி வழங்குதல் |
| 62. | சமூகப் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் மாதாந்திர ஓய்வூதியத் தொகை உயர்த்திய திட்டம் |
| 63. | விலையில்லா ஆடுகள் |
| 64. | தாய் திட்டம் |
| 65. | பள்ளி மாணவர்களுக்கான விலையில்லா பொருட்கள் வழங்கும் திட்டம் |
| 66. | மாற்றுத்திறனாளிக்கு Retro Scooter வழங்கும் திட்டம் |

| வ. எண் | படக்காட்சி செய்திமலர்கள் |
|---|---|
| 67. | மரக்கன்றுகள் நடுதல் |
| 68. | பள்ளி மாணவர்கள் பாதியில் பள்ளியை விட்டு நிற்காமல் இருக்க சிறப்பு திட்டம் |
| 69. | மின் திட்டங்கள் |
| 70. | போக்குவரத்துத் துறை |
| 71. | அரசு தொலைநோக்கு திட்டம் 2023 |
| 72. | மீன்பிடி தடைகாலத்தில் மீனவர்களுக்கு உதவித் தொகை உயர்த்தி வழங்கும் திட்டம் |
| 73. | அன்னதானத் திட்டம் |
| 74. | மானசரோவர் மற்றும் முக்திநாத் ஆகிய இடங்களுக்கு புனித பயணத்திற்கு மானியம் |
| 75. | தமிழ்நாடு சூரிய சக்தி கொள்கை மற்றும் சூரிய சக்தி திட்டங்கள் |
| 76. | பயோமெட்ரிக் ஸ்மார்ட் கார்டு மூலம் சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியம் வழங்குதல் |
| 77. | ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாகம் புனரமைப்புத் திட்டம் |
| 78. | விரைவு பட்டா மாற்றும் திட்டம் |
| 79. | மாற்றுத்திறனாளிகளுக்கான வயது வரம்பை 18 க்கு குறைத்து ஓய்வூதியம் பெறுவதற்கான திட்டம் |
| 80. | சுதந்திர போராட்ட தியாகிகளுக்கு மாதாந்திர ஓய்வூதியத் தொகையை உயர்த்திய திட்டம் |
| 81. | ‘‘சிறிய பேருந்து பெரிய மகிழ்ச்சி’’ |
| 82. | மீன்பிடி குறைவு காலத்தில் மீனவர்களுக்கு சிறப்பு நிவாரணம் உதவித் திட்டம் |
| 83. | அயல்நாட்டில் உயர்கல்வி படிக்கும் பொருளாதாரத்தில் பின்தங்கிய மாணவர்களுக்கு உதவித்தொகை வழங்கும் திட்டம் |

| வ. எண் | படக்காட்சி செய்திமலர்கள் |
|---|---|
| 84. | முத்திரைப் பதித்த மூன்றாண்டு (பகுதி 1) |
| 85. | முத்திரைப் பதித்த மூன்றாண்டு (பகுதி 2) |
| 86. | ஆண்டாண்டு போற்றும் மூன்றாண்டு சாதனைகள் |
| 87. | இமயம் தொட்ட சாதனைகள் (பாடல்) |
| 88. | தாயே அன்னபூரணி மற்றும் தொழில் புரட்சி |
| 89. | மாற்றம் தந்து ஏற்றம் தந்த புரட்சித்தலைவி |
| 90. | பயணங்கள் இனிதாகும் பேருந்துப் பயணம் |
| 91. | பண்ணை பசுமைக் காய்கறிகள் |
| 92. | குறுவை நெல் சாகுபடி |
| 93. | அணை காத்த அன்னை |
| 94. | வளமையான தமிழகம் |
| 95. | விவசாயிகளின் நலன் |
| 96. | குழந்தைகள் நலன் |
| 97. | தாய் திட்டம், காவல் துறை |
| 98. | மகளிர் மேம்பாடு |
| 99. | விலையில்லா மடிக்கணினி, அம்மா உணவகம் |
| 100. | ஊட்டச்சத்து |
| 101. | அம்மா குடிநீர், அம்மா சிமெண்ட் |
| 102. | ஆதிதிராவிடர் நலன் (ம) பிற்படுத்தப்பட்டோர் நலன் |
| 103. | திருமண உதவி திட்டம், 20 கிலோ அரிசி |
| 104. | சானிடரி நாப்கின், விலையில்லா மிதிவண்டி |
| 105. | திருக்கோயில் அன்னதான திட்டம், மானசரோவர் முக்திநாத் புனித பயண மான்ய திட்டம் |
| 106. | பண்ணை பசுமை, அம்மா மருந்தகம் |

| வ. எண் | படக்காட்சி செய்திமலர்கள் |
|---|---|
| 107. | மழைநீர் சேகரிப்பு, காடு வளர்ப்போம் |
| 108. | மீனவர்கள் நலன், முதியோர் உதவித்தொகை |
| 109. | விரிவான மருத்துவப் பாதுகாப்புத் திட்டம்,<br>தொழில்துறை – 2023 |
| 110. | மகப்பேறு நலன் |
| 111. | விலையில்லா மாடு, நான்கு ஆடுகள் |
| 112. | விவசாயிகளின் வாழ்வாதாரம் முல்லைப்பெரியாறு,<br>காவேரியை மீட்டெடுத்த காவியத்தலைவி |
| 113. | தொட்டில் குழந்தை திட்டம்,<br>அம்மா பேர் தலைப்பெழுத்து |
| 114. | விலையில்லா மிக்ஸி, கிரைண்டர் மற்றும் மின்விசிறி,<br>அம்மா உப்பு |
| 115. | தர்மம் வெல்லும் |
| 116. | பிளாஸ்டிக் ஆதார் அட்டை |

## குறும்பாடல்கள் (JINGLES)

| வ. எண் | குறும்பாடல்கள் |
|---|---|
| 1. | **வளர்ச்சிப் பாதையில் மீண்டும் தமிழ்நாடு**<br>**தொகுப்பு 1**<br>1. விலையில்லாஅரிசி<br>2. மாற்றுத்திறனாளி, விதவை, ஆதரவற்றோர் உதவித்தொகை<br>3. பெண் அரசு ஊழியர் மகப்பேறு காலம் 6 மாத விடுமுறை<br>4. மீனவர் மீன்பிடி தடைக்கால உதவித்தொகை<br>5. படித்த பெண்களுக்கு நிதியுதவியுடன் 4 கிராம் தங்கம்<br>6. பட்டம் படித்த பெண்களுக்கு 4 கிராம் தங்கம் ரூ.50 ஆயிரம் நிதியுதவி |
| 2. | **தொகுப்பு 2**<br>1. விலையில்லா மின்விசிறி, மிக்சி மற்றும் கிரைண்டர்<br>2. விலையில்லா 4 ஆடுகள், கறவைமாடு திட்டம்<br>3. விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்<br>4. விலையில்லா மடிக்கணினி<br>5. சித்திரைத் திருநாள் |
| 3. | நூறாண்டுபேசும் ஓராண்டு சாதனை |

| | |
|---|---|
| 4. | **ஒரு கையெழுத்து, மாறியது தலையெழுத்து**<br>1. விலையில்லா பசுமாடுகள், செம்மறி ஆடுகள்<br>2. விலையில்லா மடிக்கணினி<br>3. விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்<br>4. பசுமை வீடுகள் திட்டம்<br>5. தாலிக்குத் தங்கம் மற்றும் ரொக்கம்<br>6. மீன்பிடிகால உதவித் தொகை உயர்வு<br>7. விதவைகள், கணவனால் கைவிடப்பட்டோர் உதவித் தொகை உயர்வு<br>8. விலையில்லா 20 கிலோ அரிசி<br>9. கர்ப்பிணிப் பெண்களுக்கு பேறுகால உதவித் தொகை உயர்வு<br>10. விலையில்லா மின்விசிறி, மிக்சி மற்றும் கிரைண்டர் |
| 5. | **சாதனை படைத்த ஈராண்டு, சரித்திரம் பேசும் பல்லாண்டு**<br>1. காவிரியை மீட்டெடுத்த காவியத் தலைவி<br>2. பள்ளிக் கல்வி<br>3. கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டம்<br>4. போக்குவரத்துத் துறையின் வளர்ச்சி<br>5. அம்மா உணவகம் பகுதி – 1 |

| | |
|---|---|
| | 6. உழவர் பாதுகாப்புத் திட்டம்<br>7. அம்மா உணவகம் பகுதி – 2<br>8. பாலங்கள்<br>9. நிருவாகம்<br>10. தொழில்புரட்சி<br>11. தொலைநோக்குத் திட்டம் – 2023<br>12. சோலார் சிஸ்டம்<br>13. மலிவு விலை அரிசி |
| **6.** | **நாடு போற்றும் நான்காண்டு சாதனைகள்**<br>1. அம்மாவின் முதல் எழுத்து தலைப்பெழுத்து<br>2. அம்மா குடிநீர்<br>3. அம்மா மருந்தகம்<br>4. அம்மா சிமெண்ட்<br>5. அம்மா சிற்றுந்து<br>6. தொட்டில் குழந்தைத் திட்டம்<br>7. காடு வளர்ப்புத் திட்டம்<br>8. காற்றாலை மின்சாரத் திட்டம்<br>9. பண்ணைப் பசுமை<br>10. மழைநீர் சேகரிப்பு |

**“தனக்கென வாழாமல் தமிழக மக்களுக்காக வாழ்ந்தவர் முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவர் எம்ஜிஆர் அவர்கள்”**

**– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்**
**புரட்சித்தலைவி அம்மா அவர்கள்**

## எம்ஜிஆர் அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனம்

எம்ஜிஆர் அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனம் திரைப்படத் தயாரிப்பு, தொழில்நுட்பக் கல்வி நுணுக்கங்களையும், கலை உணர்வுகளையும் பயிற்றுவிக்கும் முன்னோடி நிறுவனம் ஆகும். இந்நிறுவனத்தின் முக்கியக் குறிக்கோள் பல்வேறு விதமான திரைப்படங்கள் மற்றும் வீடியோ படங்கள் தயாரிப்பதற்குத் தேவையான தொழில்நுட்பங்களையும் பிற திரைப்படத் துணைப்பாடங்களையும் மாணவர்களுக்குக் கற்றுத்தருவதாகும்.

இந்தியாவில் உள்ள திரைப்படம் மற்றும் தொலைக்காட்சித் தொழில்நுட்பப் பயிற்சி தரும் மூன்று நிறுவனங்களில், தமிழக அரசின் செய்தி மக்கள் தொடர்புத் துறை கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் எம்ஜிஆர் அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனமும் ஒன்றாகும். மற்றவை, பூனாவில் உள்ள திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனமும், கொல்கத்தாவில் உள்ள சத்தியஜித்ரே திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனமும் ஆகும்.

**பட்டயப் படிப்புகள்**

இந்நிறுவனத்தில் பயிற்சி அளிக்கப்படும் எல்லாப் பட்டயப் படிப்புகளுக்கும் புதுடில்லியில் உள்ள அகில இந்தியத் தொழில்நுட்பக் கல்விக்குழு (AICTE) அங்கீகாரம் அளித்துள்ளது. எம்ஜிஆர் அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனத்தில் கீழ்க்கண்ட பட்டயப் படிப்புகள் நடத்தப்படுகின்றன.

இயக்குதல் மற்றும் திரைக்கதை வசனம் எழுதுதல், ஒளிப்பதிவு, ஒலிப்பதிவு மற்றும் ஒலிப்பொறியியல், படத்தொகுப்பு, டிஜிட்டல் இன்டர்மீடியெட், உயிர்ப்பூட்டல் மற்றும் காட்சிப்பயன் ஆகிய பட்டயப் படிப்புகள் மூன்று ஆண்டு காலத்தில் பயிற்றுவிக்கப்படுகின்றன. இயக்குதல் மற்றும் திரைக்கதை வசனம் எழுதுதலுக்கு ஏதாவது ஒரு பட்டப் படிப்பும், உயிர்ப்பூட்டல் மற்றும் காட்சிப்பயன் பட்டயப் படிப்புக்கு அரசு ஓவியக் கல்லூரியின் இளங்கலைப் பட்டம், அறிவியல் இளங்கலை பட்டம் (Animation, Visual Effect, Mass Communication, Electronic Media, Visual Communication) ஆகியவற்றுள் ஏதாவது ஒரு பட்டப் படிப்பும், ஏனைய பட்டயப் படிப்புகளுக்கு மேல்நிலை வகுப்புத் தேர்ச்சியும் கல்வித் தகுதியாகும்.

ஒவ்வொரு பிரிவிலும் 14 மாணவர்கள் சேர்க்கப் படுகிறார்கள். கல்விக் கட்டணமாக ரூ.15,000/–மும், சிறப்புக் கட்டணமாக ரூ.2,000/–மும், வளர்ச்சிக் கட்டணமாக ரூ.1,000/–மும் வசூலிக்கப்படுகிறது. தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் இனத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு கல்விக் கட்டணம் முற்றிலுமாக விலக்களிக்கப்பட்டுள்ளது.

## மாணவர்கள் தயாரிக்கும் படங்களுக்கு நிதியுதவி

கல்வியிறுதியாண்டில், அனைத்துத் துறைகளிலும் பயிலும் மாணவர்கள் ஒன்று சேர்ந்து 14 குழுக்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு குழுவும் ஒரு பட்டயக் குறும்படம் வீதம் 14 பட்டயப் படங்கள் தயாரிக்கப் பயிற்சி அளிக்கப்படுகிறது. மேலும், தமிழக அரசின் மூலம் 2012–2013ஆம் நிதியாண்டு முதல் பட்டயப் படிப்பு மாணவர்களின் படப்பிடிப்பு தயாரிப்புச் செலவிற்காக ஒரு மாணவருக்கு ஒரு பட்டயப் படம் தயாரிக்க அளிக்கப்படும் நிதியுதவி ரூ.8,000/– லிருந்து ரூ.15,000/– ஆக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

## குறும்பட விருது

“எம்ஜிஆர் அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவன மாணவர்களுக்குக் குறும்பட விருது” என்ற பெயரில், இந்நிறுவன மாணவர்கள் தயாரிக்கும் குறும்படங்களின் சிறந்த இயக்குநர், சிறந்த ஒளிப்பதிவாளர், சிறந்த ஒலிப்பதிவாளர், சிறந்த படத்தொகுப்பாளர் மற்றும் சிறந்த படச்சுருள் படஆக்கம் – அச்சிடல் வல்லுநர் தேர்வு செய்யப்பட்டு, அவர்களுக்குத் தலா ஒரு பவுன் தங்கப்பதக்கம் மற்றும் ரூ.5,000/– பரிசும் மற்றும் நினைவுக் கேடயமும் வழங்கி வருகிறது.

## திரைப்பட விழாக்களில் பங்கேற்க நிதியுதவி

மாணவர்களால் தயாரிக்கப்படும் பட்டயப் படங்களை தேசிய மற்றும் சர்வதேச திரைப்பட விழாக்களில் கலந்து

கொள்ள அனுப்பும் பொருட்டு ஆண்டுதோறும் ரூ.75,000/– தமிழக அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

## அகில இந்தியத் திரைப்பட விழா

எம்ஜிஆர் அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனத்தைச் சேர்ந்த மாணவர்கள் தயாரித்த திரைப்படம், கோவாவில் நடைபெற்ற அகில இந்தியத் திரைப்பட விழாவில் திரையிடப்பட்டது.

## அம்மா விருது

சென்னையில் கடந்த 2014–2015ஆம் ஆண்டில் நடைபெற்ற "சென்னை சர்வதேச திரைப்பட விழா"வில், எம்ஜிஆர் அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனத்தைச் சேர்ந்த மாணவர்களின் 5 பட்டயக் குறும்படங்கள் போட்டியிட்டு " ***சீ*** " என்ற பட்டயக் குறும்படம் "**அம்மா**" விருதினை வென்றுள்ளது.

## உயிர்ப்பூட்டல் மற்றும் காட்சிப்பயன் பாடத்திட்டம் (Animation and Visual Effects Course)

இந்நிறுவனத்தில் கல்வி பயிலும் மாணவர்கள் திரைப்படத் துறையில் நவீன தொழில் நுட்பத்திற்கேற்ப சிறந்த முறையில் விளங்கிட ரூ.9.50 கோடி மதிப்பீட்டில், 2013–2014ஆம் கல்வியாண்டில் உயிர்ப்பூட்டல் மற்றும் காட்சிப்பயன் எனும் புதிய பட்டயப்படிப்பு தொடங்கப்பட்டுள்ளது. இப்பாடத்திட்டத்திற்கு ரூ.3.69 கோடியில் புதிய வகுப்பறைகள் கட்டப்பட்டுள்ளதுடன், ரூ.93 லட்சத்தில் ரிச் மேன் ஹவுஸ் மற்றும் ரூ.90 லட்சத்தில் டப்பிங் தியேட்டர் புனரமைப்பும் செய்யப்பட்டுள்ளன.

## புதிய கட்டடம் மற்றும் புனரமைப்புப் பணிகள்

**2012–2013**ஆம் நிதியாண்டில் எம்ஜிஆர் அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனத்தில் அமையப்பட்டுள்ள முன்காண் திரையரங்கம் ரூ.**99** லட்சம் மதிப்பீட்டில் புனரமைப்பு செய்யப்பட்டுள்ளது.

மேலும் **2013–2014** ஆம் நிதியாண்டில் எம்ஜிஆர் அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனத்தில் மாணவர்கள் தங்கிப் பயிலும் வகையில், கூடுதல் தேவையைக் கருத்தில் கொண்டு மாணவர் விடுதி ரூ.**2** கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ளது.

**2013–2014** ஆம் நிதியாண்டில் எம்ஜிஆர் அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனத்தில் முன்காண் திரையரங்கத்தை நவீன உயர்தர டிஜிட்டல் டால்பி பார்கோ புரொஜெக்டர் மற்றும் நவீன ஒலி அமைப்புடன் புதுப்பிக்கப்பட்டு (Surround Sound System) அதற்கான துணைக் கருவிகள் ரூ.**90** லட்சம் செலவில் வாங்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.

எம்ஜிஆர் அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனம் தரமணி வளாகத்தில் செயல்படத் தொடங்கி **50** ஆண்டுகள் நிறைவடைவதையொட்டி, இந்நிறுவன வளாகத்தில் பொன்விழா முகப்பு வளைவு மற்றும் பாரதரத்னா எம்ஜிஆர் அவர்களின் மார்பளவுச் சிலை ரூ.**15** லட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு வருகின்றன.

**“சினிமா சக்தி வாய்ந்த மக்கள் ஊடகமாக திகழ்கிறது”**

**– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்**
**புரட்சித்தலைவி அம்மா அவர்கள்**

# திரைப்படம், வீடியோ மற்றும் கேபிள் தொலைக்காட்சி இணைப்பு

தமிழ்நாட்டில் உள்ள மிகப் பெரிய தொழில்களில் திரைப்படத் தொழிலும் ஒன்றாகும். மேலும், தமிழ்நாட்டில்தான் தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம் மற்றும் இந்தி மொழிப் படங்கள் மிக அதிக அளவில் தயாரிக்கப்படுகின்றன. திரைப்படத் தொழில் அரசுக்கும், உள்ளாட்சி அமைப்புகளுக்கும் பெரிய அளவில் வருவாய் ஈட்டித் தருகின்ற துறையாக விளங்குகிறது. திரையரங்குகளில் படம் பார்ப்பது பெரும்பான்மை மக்களின் முக்கியமானதொரு பொழுதுபோக்கு அம்சமாக இருந்து வருகிறது. எனவே, திரைப்படத் துறையின் பல்வேறு விதமான வளர்ச்சியை ஊக்குவிக்கும் வகையில் அரசு பல்வேறு சலுகைகளை வழங்கி வருகிறது.

திரையரங்குகளில் திரைப்படம் திரையிடுவதற்கு சான்றளிக்கவும், திரையிடுவதை முறைப்படுத்தவும், திரையரங்கு சட்டம், 1952 (மத்திய சட்டம் XXXVII/1952) இயற்றப்பட்டது.

திரைப்படத் துறையை ஒழுங்குபடுத்தும் பொருட்டு, தமிழ்நாடு திரையரங்குகள் (ஒழுங்குமுறை) சட்டம், 1955 தமிழ்நாடு அரசால் இயற்றப்பட்டுள்ளது. திரையரங்குகளில்

திரைப்படங்கள் வெளியிடுவதற்கு தனியாருக்கு உரிமம் வழங்குவதற்கு இச்சட்டம் வழிவகை செய்கிறது. மேற்கண்ட சட்டப் பிரிவுகளின்படி, மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சித் தலைவர்களும், சென்னை மாநகரத்தைப் பொறுத்தவரை காவல்துறை ஆணையரும் உரிமம் வழங்கும் அலுவலராக செயல்படுகின்றனர். இணை ஆணையர், நில நிர்வாகத் துறை அவர்கள் மேல்முறையீட்டு அலுவலராகவும், அவரது முடிவை சீராய்வு மேற்கொள்ளும் அதிகாரம் இச்சட்டப் பிரிவுகளின்படி அரசுக்கும் வழங்கப்பட்டுள்ளது. திரையரங்குகளில் திரைப்படம் காண வருகின்ற பொதுமக்களுக்கு கட்டட நிலைப்புத்தன்மையுடன் கூடிய அடிப்படை வசதிகள், முறையான பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு அம்சங்கள் அமைகின்ற வகையில் 1957 ஆம் ஆண்டைய தமிழ்நாடு திரையரங்குகள் (ஒழுங்குமுறை) விதிகளில் வழிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டில் 1,040 திரையரங்குகள் இயங்கி வருகின்றன. அவற்றின் விவரங்கள் பின்வருமாறு :–

| | | |
|---|---|---|
| 1. | நிரந்தரத் திரையரங்குகள் | 998 |
| 2. | பகுதி நிரந்தரத் திரையரங்குகள் | 21 |
| 3. | நடமாடும் திரையரங்குகள் | 18 |
| 4. | திறந்த வெளித் திரையரங்குகள் | 03 |
| | மொத்தம் | 1,040 |

## கேபிள் தொலைக்காட்சி கட்டமைப்பு

இந்தியா முழுவதும் உள்ள கேபிள் தொலைக்காட்சி கட்டமைப்பினை 1995 ஆம் ஆண்டு கேபிள் தொலைக்காட்சி

கட்டமைப்புச் (முறைப்படுத்துதல்) சட்டம் (மத்திய சட்டம் 7/1995) முறைப்படுத்துகிறது. கேபிள் தொலைக்காட்சி திருத்தச் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் (எண்.21/2011)இன்படி, மாவட்ட, உட்கோட்ட மாஜிஸ்டிரேட்டுகள் மற்றும் மாநகர காவல்துறை ஆணையாளர்கள் ஆகியோர் இச்சட்டத்தின் 3, 4A, 5, 6, 8, மற்றும் 9 (அல்லது) 10 ஆகிய பிரிவுகளை மீறும், கேபிள் தொலைக்காட்சி இயக்குபவர்கள் மீது நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் பெற்ற அலுவலர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். அதன்படி, தமிழக அரசு உரிய அறிவிக்கையினை வெளியிட்டுள்ளது. அதில் சென்னை, திருச்சி, திருநெல்வேலி, மதுரை, சேலம் மற்றும் கோயம்புத்தூர் ஆகிய மாநகரங்களில் மாநகர காவல்துறை ஆணையாளர்களும், மாவட்டங்களைப் பொறுத்தளவில் மாவட்ட ஆட்சியர்களும் மற்றும் வருவாய் கோட்டாட்சியர்களும் கேபிள் தொலைக்காட்சி சட்டத்தினை மீறுபவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கு அதிகாரம் பெற்ற அலுவலர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். மேலும், கேபிள் தொலைக்காட்சி (முறைப்படுத்துதல்) சட்டத்தினை மீறுபவர்கள் மீது கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்,மாநகரக் காவல் ஆணையாளர்கள் மற்றும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

## வீடியோ சட்டமும் விதிகளும்

1984ஆம் ஆண்டு தமிழ்நாடு வீடியோ கேசட் பதிவுக் கருவிகள் மற்றும் கேபிள் மூலமாக தொலைக்காட்சிப் பெட்டித்

திரையில், திரைப்படங்களைக் காட்டுதல் (முறைப்படுத்துதல்) சட்டம், தமிழ்நாட்டில், வீடியோ கேசட் பதிவுக் கருவிகளைப் பயன்படுத்தி திரைப்படங்களை தொலைக்காட்சித் திரைகளில் ஒளிபரப்பு செய்வதை முறைப்படுத்துகிறது. இச்சட்டம் வீடியோ கேசட் பதிவுக் கருவிகள் மூலம் தொலைக்காட்சித் திரையில் திரைப்படங்களை ஒளிபரப்புவதற்கும், வீடியோ நூலகங்கள் நடத்துவதற்கும் தனியார்களுக்கு உரிமம் வழங்க வகை செய்கிறது. மாவட்ட அளவில் அந்தந்த மாவட்ட ஆட்சியர்களும், சென்னை மாநகரில், காவல்துறை ஆணையாளரும் உரிமம் வழங்கும் அலுவலர்களாக செயல்படுகின்றனர்.

## திருட்டு வீடியோ தடுப்புப் பிரிவு

காவல் துறை கூடுதல் தலைமை இயக்குநரின் (குற்றம்) நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ், குற்றப்பிரிவு, குற்றப் புலனாய்வுத் துறையில் திருட்டு வீடியோ தடுப்புப் பிரிவு இயங்கி வருகிறது. காவல் துறை கூடுதல் தலைமை இயக்குநருக்கு உதவி செய்யும் பொருட்டு மாநில அளவில் ஒரு காவல் துறை கண்காணிப்பாளர் மற்றும் ஒரு காவல் துறை துணை கண்காணிப்பாளர் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். தமிழ்நாட்டில் தற்போது சென்னை (2), புனித தோமையார் மலை (1), வேலூர் (1), சேலம் (1), கோயம்புத்தூர் (1), திருச்சி (1), கடலூர் (1), மதுரை (1), திண்டுக்கல் (1), விருதுநகர் (1) மற்றும் திருநெல்வேலி (1) ஆகிய பன்னிரண்டு இடங்களில் திருட்டு வீடியோ தடுப்புப் பிரிவுகள் இயங்கி வருகின்றன.

ஒவ்வொரு அலகும், ஒரு காவல் ஆய்வாளர், ஒரு உதவி ஆய்வாளர் மற்றும் ஆறு முதல் நிலைக் காவலர்களை உள்ளடக்கியதாகும். சென்னையைப் பொறுத்த வரை இரண்டு அலகுகள் இயங்கி வருகின்றன. அதில் அலகு 1இல் ஒரு ஆய்வாளர், இரண்டு உதவி ஆய்வாளர்கள், எட்டு முதல் நிலை காவலர்கள் மற்றும் இரண்டு இரண்டாம் நிலை காவலர்கள் உள்ளனர். அலகு 2இல் ஒரு ஆய்வாளர், இரண்டு உதவி ஆய்வாளர்கள், மற்றும் எட்டு முதல் நிலைக் காவலர்கள் உள்ளனர். 1957ஆம் ஆண்டு பதிப்புரிமைச் சட்டம் மற்றும் 2000ஆம் ஆண்டு தகவல் தொழில்நுட்பச் சட்டம் ஆகியவை தொடர்பான சட்ட விதி மீறல்களைத் தடுக்க இப்பிரிவு பயன்படுத்தப்பட்டு வருகிறது. வீடியோ தடுப்பு பிரிவினால் 2004ஆம் ஆண்டு முதல் 2015ஆம் ஆண்டு வரை பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை, அவ்வழக்குகளில் கைது செய்யப்பட்ட குற்றவாளிகளின் எண்ணிக்கை மற்றும் கைப்பற்றப்பட்ட சொத்துக்களின் மதிப்பு முதலிய விவரங்கள் கீழேயுள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ளன:–

## திருட்டு வீடியோ தடுப்பு பிரிவால் பதிவு செய்யப்பட்ட வழக்குகள் குறித்த விபரம் 2004 முதல் 2015 வரை (31.03.2015 வரை)

| வருடம் | பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை | கைது செய்யப்பட்ட குற்றவாளிகளின் எண்ணிக்கை | கைப்பற்றப்பட்ட சொத்தின் மதிப்பு (ரூ) | கேபிள் தொலைக்காட்சி நடத்துபவர்கள் மீது பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| **2004** | 1151 | 1206 | 12,06,43,647 | 53 |
| **2005** | 813 | 950 | 9,44,55,557 | 13 |
| **2006** | 1153 | 1193 | 19,00,04,502 | 10 |
| **2007** | 1844 | 1866 | 17,38,74,360 | 9 |
| **2008** | 1968 | 1955 | 1,72,23,401 | 17 |
| **2009** | 2204 | 2201 | 8,32,59,759 | 31 |
| **2010** | 2690 | 2664 | 14,38,31,530 | 34 |
| **2011** | 2665 | 2648 | 10,78,74,745 | 9 |
| **2012** | 2858 | 2838 | 14,36,05,175 | 2 |
| **2013** | 3020 | 3004 | 36,57,57,107 | 2 |
| **2014** | 3320 | 3320 | 17,75,02,306 | 29 |
| **2015 (31.3.15 வரை)** | 895 | 895 | 3,80,54,461 | 6 |

இது தவிர, வீடியோ திருட்டில் ஈடுபடுபவர்கள் மீது குண்டர்கள் தடுப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 14/1982) கீழும் வழக்குகள் பதிவு செய்யப்படுகின்றன. வீடியோ திருட்டு சம்பந்தமான குற்றங்களில், 2014–2015ஆம் ஆண்டில் 11 நபர்கள் குண்டர்கள் தடுப்புச் சட்டத்தின் கீழ் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

**“உழைப்பில் இருக்கிறது வெற்றி”**

**– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்**
**புரட்சித்தலைவி அம்மா அவர்கள்**

## தமிழரசு

தமிழ்நாடு அரசின் பல்வேறு திட்டங்கள், மக்கள் நலப்பணிகள், நலத்திட்ட உதவிகள், சாதனைகள் மற்றும் அறிவிப்புகள் ஆகியவற்றை மக்களிடம் கொண்டு சேர்க்கும் அரசின் அச்சு ஊடகமாகத் தமிழரசு இதழ் திகழ்ந்து வருகிறது. அரசின் சாதனைகளையும், திட்டங்களையும் விளக்கும் இதழாக தமிழரசு விளங்குகிறது.

மேதகு தமிழக ஆளுநர் அவர்களின் உரைத்தொகுப்புகள், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உரைத் தொகுப்புகள் மற்றும் அறிவிப்புகள், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களின் உரைகள் மற்றும் அறிவிப்புகள், தமிழக அரசின் சாதனைகள், மக்கள் நலத் திட்டங்களின் செயல்பாடுகள், அரசு நலத்திட்ட உதவிகள், மாவட்ட வளர்ச்சிப் பணிகள் குறித்த விரிவான கட்டுரைகள், தமிழகம் முழுவதிலும் உள்ள நலத்திட்ட உதவிகள் பெற்ற பயனாளிகளின் மன உணர்வுகளை வெளிப்படுத்தும் வெற்றிக் கதைகள், பொதுமக்களுக்குப் பயனளிக்கும் முக்கிய அரசாணைகள் உள்ளிட்டவை தமிழரசு இதழில் வெளியிடப்படுகின்றன. மேலும், மகளிர் நலம், குடும்பநலம், மருத்துவம், இரத்ததானம், எய்ட்ஸ் விழிப்புணர்வு உள்ளிட்ட சமூக நலம் சார்ந்த அரசின் திட்டங்களை

விளக்கிடும் கட்டுரைகள், தமிழ் இலக்கிய வளத்தை உணர்த்தும் கட்டுரைகள், சிறுகதைகள், கவிதைகள் ஆகியவற்றுடன் அரசு மற்றும் அரசுத்துறை சார்ந்த நிறுவனங்களின் விளம்பரங்களையும் தாங்கித் தமிழரசு இதழ், தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் திங்கள் தோறும் வெளியிடப்படுகின்றது.

காலாண்டு இதழாக வெளிவந்த தமிழரசு ஆங்கில இதழ், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, ஜுலை 2012 முதல் மாத இதழாக வெளியிடப்பட்டு வருகிறது.

## சிறப்பு வெளியீடுகள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முக்கிய நிகழ்ச்சிகளில் ஆற்றிய தமிழ் மற்றும் ஆங்கில உரைகள் அடங்கிய சிறப்பு வெளியீடுகள் அவ்வப்போது வெளியிடப்பட்டு மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்கள் மூலமாக மக்களுக்கு வழங்கப்படுகின்றன. தமிழரசு இதழ்கள் மட்டுமல்லாமல், தலைவர்கள், தியாகிகள் மற்றும் சான்றோர்களின் வாழ்க்கைக் குறிப்புகள் அடங்கிய மடிப்பேடுகள், சிறப்புக் கையேடுகள், தொலைபேசிச் சிறுகையேடு, அரசு விழா அழைப்பிதழ்கள், சுவரொட்டிகள் ஆகியவையும் அழகிய முறையில் வடிவமைத்து, தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகின்றன. மேலும், செய்தி மக்கள் தொடர்புத்துறையின் இதரப் பிரிவுகளுக்குரிய விண்ணப்பங்கள் மற்றும் படிவங்கள் போன்றவையும் இங்கு அச்சிட்டு வழங்கப்படுகின்றன.

## சாதனை மலர்கள்

**“மாற்றம் தந்த மக்களுக்கு**
**ஏற்றம் தரும் அரசின்**
**100 நாள் சாதனைகள்”**

மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் தலைமையிலான தமிழக அரசின் 100 நாள் சாதனைகளைத் துறைவாரியாகத் தொகுத்து “மாற்றம் தந்த மக்களுக்கு ஏற்றம் தரும் அரசின் 100 நாள் சாதனைகள்” என்ற சிறப்பு மலர் வெளியிடப்பட்டது.

## நூறாண்டு பேசும் ஓராண்டு சாதனைகள்

மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் தலைமையிலான அரசு பொறுப்பேற்று ஓராண்டு நிறைவுபெற்றதையொட்டி, ‘தமிழரசு’ சார்பில் அரசின் சாதனைகள் துறை வாரியாகத் தொகுக்கப்பட்டு “நூறாண்டு பேசும் ஓராண்டு சாதனைகள்” மலர் தமிழிலும் “One year of Achievements, Hundred Years Leap Forward” மலர் ஆங்கிலத்திலும் வெளியிடப்பட்டன.

## சாதனை புரிந்த ஈராண்டு
## சரித்திரம் பேசும் பல்லாண்டு

மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் தலைமையிலான அரசு பொறுப்பேற்று ஈராண்டு நிறைவுபெற்றதையொட்டி, ‘தமிழரசு’ சார்பில் அரசின் சாதனைகள் துறை வாரியாகத் தொகுக்கப்பட்டு “சாதனை புரிந்த ஈராண்டு – சரித்திரம் பேசும் பல்லாண்டு” மலர் தமிழிலும், “Achievements of Two Years - History Forever” மலர் ஆங்கிலத்திலும் வெளியிடப்பட்டன.

## மூன்றாண்டு சாதனை மலர்

மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் தலைமையிலான அரசு பொறுப்பேற்று மூன்றாண்டு நிறைவு பெற்றதையொட்டி, “தமிழரசு” சார்பில் அரசின் சாதனைகள் துறை வாரியாகத் தொகுக்கப்பட்டு, “மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் அரசின் மூன்றாண்டு சாதனைகள்” மலர் தமிழிலும், “Three year Achievements of the Government Headed by the Hon’ble Chief Minister of Tamil Nadu Puratchi Thalaivi Amma” மலர் ஆங்கிலத்திலும் வெளியிடப்பட்டன.

## நான்காண்டு சாதனை மலர்

மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் தலைமையிலான அரசு பொறுப்பேற்று நான்காண்டு நிறைவு பெற்றதையொட்டி, “தமிழரசு” சார்பில் அரசின் சாதனைகள் துறை வாரியாகத் தொகுக்கப்பட்டு, “மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் அரசின் நான்காண்டு சாதனைகள்” மலர் தமிழிலும், “Four year Achievements of the Government Headed by the Hon’ble Chief Minister of Tamil Nadu Puratchi Thalaivi Amma” மலர் ஆங்கிலத்திலும் வெளியிடப்பட்டன.

## மடிப்பேடுகள்

“தமிழரசு” சார்பில் 2011 மே முதல் தற்போது வரை பல்வேறு தலைவர்கள், தியாகிகளின் வாழ்க்கை வரலாறுகள் மடிப்பேடுகளாக அச்சடிக்கப்பட்டு, அந்தந்த மாவட்டங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

1. தந்தை பெரியார்

2. பேரறிஞர் அண்ணா

3. பெருந்தலைவர் காமராசர்

4. பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர்

5 . மகாகவி சுப்பிரமணிய பாரதியார்

6. கண்ணியத் தென்றல் காயிதே மில்லத் முகம்மது இஸ்மாயில்

7. தியாகச் செம்மல் வ.உ. சிதம்பரனார்

8. வீரன் சுந்தரலிங்கம்

9. சுதந்திரப் போராட்ட வீரர் அழகு முத்துக்கோன்

10. விடுதலைப் போராட்ட வீரர் செண்பகராமன்

11. பகுத்தறிவுக் கவிராயர் உடுமலை நாராயண கவி

12. பொதுவுடைமை வீரர் ப. ஜீவானந்தம்

13. சுதந்திரப் போராட்ட வீரர் திருப்பூர் குமரன்

14. விருப்பாட்சி கோபால் நாயக்கர்

15. தியாகி வ.வே. சுப்பிரமணிய அய்யர்

16. தியாகி ஆர்யா (எ) பாஷ்யம்

17. மார்ஷல் நேசமணி

18. முன்னாள் மேயர் என் சிவராஜ்

19. தமிழுக்குப் பெருமை சேர்த்த பரிதிமாற் கலைஞர்

20. தீரன் சின்னமலை

21. தியாக சீலர் கக்கன்

22. தியாகி சங்கரலிங்கனார்

23. தியாகி விஸ்வநாததாஸ்

24. அமுதகவியரசு உமறுப்புலவர்

25. கவியரசு கண்ணதாசன்
26. நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம்பிள்ளை
27. மக்கள் கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்
28. சதாவதானி செய்குத் தம்பி பாவலர்
29. மொழிஞாயிறு தேவநேயப்பாவாணர்
30. தவத்திரு குன்றக்குடி அடிகளார்
31. பட்டுக்கோட்டை அழகிரிசாமி
32. மாமன்னர் பெரும்பிடுகு முத்தரையர்
33. ராபர்ட் கால்டுவெல்

**சிறப்பு வெளியீடுகள்**

| வ. எண் | தலைப்பு | வெளியிடப்பட்ட மாதம் |
|---|---|---|
| 1 | **மீண்டும் வளர்ச்சிப் பாதையில் தமிழ்நாடு** – சட்டப்பேரவையில் மேதகு ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்திற்கு பதிலளித்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆற்றிய உரை – **10.06.2011.** | ஜூன் 2011 |
| 2 | 05.07.2011ல் நடைபெற்ற **தேசிய வளர்ச்சிக்குழு** கூட்டத்தில்மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை (ஆங்கிலம்) | ஜூலை 2011 |

| வ. எண் | தலைப்பு | வெளியிடப்பட்ட மாதம் |
|---|---|---|
| **3** | மக்களுக்கு ஆற்ற வேண்டிய கடமைகளைத் தொய்வின்றி ஆற்றுவோம்! மக்கள் நலத் திட்டங்களை விரைந்து நிறைவேற்றுவோம்!! – சட்டப் பேரவையில் மேதகு ஆளுநர் அவர்கள் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்திற்கு பதிலளித்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆற்றிய உரை– 04.02.2012 | பிப்ரவரி 2012 |
| **4** | 22.03.2012 இல் சென்னையில் நடைபெற்ற **"தொலைநோக்குப் பார்வை தமிழ்நாடு 2023"** வெளியீட்டு விழாவில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமை உரை (ஆங்கிலம்) | மார்ச் 2012 |
| **5** | **புரட்சித்தலைவி அம்மாவின் எழுச்சிமிகு உரைகள்**<br>மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் பல்வேறு நிகழ்ச்சிகளில் ஆற்றிய உரைகளின் தொகுப்பு – 1 (ஓராண்டு சாதனை சிறப்பு வெளியீடு)<br>(தமிழ் மற்றும் ஆங்கிலம்) | மே 2012 |

| வ. எண் | தலைப்பு | வெளியிடப்பட்ட மாதம் |
|---|---|---|
| 6 | **புரட்சித்தலைவி அம்மாவின் எழுச்சிமிகு உரைகள்** மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் பல்வேறு நிகழ்ச்சிகளில் ஆற்றிய உரைகளின் தொகுப்பு – 2 (ஓராண்டு சாதனை சிறப்பு வெளியீடு) | மே 2012 |
| 7 | **புரட்சித்தலைவி அம்மாவின் நலத் திட்டங்கள்** பயன் பெற்றோரின் **வெற்றிக் கதைகள்** (ஓராண்டு சாதனை சிறப்பு வெளியீடு) | மே 2012 |
| 8 | புரட்சித்தலைவி அம்மாவின் **அமுத மொழிகள்** (ஓராண்டு சாதனை சிறப்பு வெளியீடு) | மே 2012 |
| 9 | புது டெல்லியில் **04.06.2012 மத்திய திட்டக்குழு துணைத் தலைவரின் தமிழ்நாட்டிற்கான ஆண்டுத் திட்டம்** இறுதி செய்யும் கூட்டத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சிறப்புரை (ஆங்கிலம்) | ஜூன் 2012 |
| 10 | புது டெல்லியில் **19.09.2012**இல் நடைபெற்ற **காவிரி நதிநீர் ஆணையத்தின் ஏழாவது கூட்டத்தில்** மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உரை (ஆங்கிலம்) | செப்டம்பர் 2012 |

| வ. எண் | தலைப்பு | வெளியிடப்பட்ட மாதம் |
|---|---|---|
| 11 | 05.11.2012 இல் சென்னையில் நடைபெற்ற தமிழகத்தில் தொழில் முதலீட்டிற்கான 12 நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடும் நிகழ்ச்சியில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உரை (ஆங்கிலம்) | நவம்பர் 2012 |
| 12 | **காவிரி நதி நீர் பங்கீடு –** மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் உரைகள் (தமிழ் மற்றும் ஆங்கிலம்) | டிசம்பர் 2012 |
| 13 | **விதியை மாற்றிய விதி –** தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் **விதி 110 இன் கீழ்** மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆற்றிய உரைகளின் தொகுப்பு – 1 | டிசம்பர் 2012 |
| 14 | மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் காவல்துறை அதிகாரிகள் மாநாட்டில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆற்றிய உரைகள் – 17,18 மற்றும் 19 டிசம்பர் 2012 (தமிழ் மற்றும் ஆங்கிலம்) | டிசம்பர் 2012 |
| 15 | புது டெல்லியில் 27.12.2012இல் **57 ஆவது தேசிய வளர்ச்சிக் குழு கூட்டத்தில்** மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் உரை (ஆங்கிலம்) | டிசம்பர் 2012 |

| வ. எண் | தலைப்பு | வெளியிடப்பட்ட மாதம் |
|---|---|---|
| 16 | உயரிய இலட்சியங்களை அடைய அயராது பாடுபட்டு வரும் மக்கள் நல அரசு – சட்டப் பேரவையில் மேதகு ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்திற்குப் பதிலளித்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆற்றிய உரை (08.02.2013) | பிப்ரவரி 2013 |
| 17 | **கச்சத்தீவை மீட்போம்** – 03.05.2013 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆற்றிய உரை | மே 2013 |
| 18 | மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மாவின் எழுச்சிமிகு உரைகள் – தொகுப்பு–3 (ஈராண்டு சாதனைகள் சிறப்பு வெளியீடு) | மே 2013 |
| 19 | மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மாவின் எழுச்சிமிகு உரைகள் – தொகுப்பு–4 (ஈராண்டு சாதனைகள் சிறப்பு வெளியீடு) | மே 2013 |
| 20 | மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மாவின் எழுச்சிமிகு உரைகள் – தொகுப்பு–2 (ஈராண்டு சாதனைகள் சிறப்பு வெளியீடு) (ஆங்கிலம்) | மே 2013 |

| வ. எண் | தலைப்பு | வெளியிடப்பட்ட மாதம் |
|---|---|---|
| **21** | புரட்சித்தலைவி அம்மா உரைகளில் மலர்ந்த **முத்தான கதைகள்** (ஈராண்டு சாதனைகள் சிறப்பு வெளியீடு) | மே 2013 |
| **22** | **விதியை மாற்றிய விதி**–தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் விதி 110இன் கீழ் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆற்றிய உரைகளின் தொகுப்பு–2 (ஈராண்டு சாதனைகள் சிறப்பு வெளியீடு) | மே 2013 |
| **23** | புது டெல்லியில் 05.06.2013 அன்று நடைபெற்ற உள்நாட்டுப் பாதுகாப்பு குறித்த முதலமைச்சர்கள் மாநாட்டில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் உரை (ஆங்கிலம்) | ஜூன் 2013 |
| **24** | புதுடெல்லியில் 10.06.2013 அன்று தமிழ்நாட்டுக்கான 2013–2014ஆம் ஆண்டின் ஆண்டுத் திட்டத்தை இறுதி செய்வதற்கான மத்திய திட்டக் குழுவின் கூட்டத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆற்றிய உரை (ஆங்கிலம்) | ஜூன் 2013 |
| **25** | தமிழக அரசின் பொதுத்துறை நிறுவனங்களுக்கு **என்.எல்.சி.யின் பங்குகள்!** தமிழ்நாட்டு மக்களுக்கு கிடைத்த வெற்றி!! | ஜூலை 2013 |

| **வ. எண்** | **தலைப்பு** | **வெளியிடப்பட்ட மாதம்** |
|---|---|---|
| **26** | **1.**சென்னைப் பல்கலைக் கழக நூற்றாண்டு விழா அரங்கில் **17.08.2013** அன்று நடைபெற்ற, சென்னைப் பல்கலைக்கழகத்தின் **155 ஆம் ஆண்டு பட்டமளிப்பு விழாவில்** மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆற்றிய உரை (ஆங்கிலம்) | ஆகஸ்ட் 2013 |
| | **2.** சென்னைப் பல்கலைக் கழக நூற்றாண்டு விழா அரங்கில் **20.08.2013** அன்று நடைபெற்ற தமிழ்நாடு **டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவ பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு வெள்ளி விழாவில்** மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆற்றிய உரை (ஆங்கிலம்) | ஆகஸ்ட் 2013 |
| **27** | **மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் காவல்துறை அதிகாரிகள் மாநாட்டில்** மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆற்றிய உரைகள் 11,12 மற்றும் 13 டிசம்பர் 2013 (ஆங்கிலம்) | டிசம்பர் 2013 |
| **28** | சென்னையில் **16.12.2013** அன்று நடைபெற்ற **14ஆவது நிதிக்குழு ஆய்வுக்கூட்டம்** மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரைத்தொகுப்பு | டிசம்பர் 2013 |

| வ. எண் | தலைப்பு | வெளியிடப்பட்ட மாதம் |
|---|---|---|
| **29** | சென்னை, ஜவஹர்லால் நேரு உள்விளையாட்டு அரங்கில் 27.01.2014 அன்று நடைபெற்ற 4 ஆவது அகில இந்திய காவல் அதிரடிப்படையினர் திறன் போட்டி நிறைவு விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆற்றிய பேருரை (ஆங்கிலம்) | ஜனவரி 2014 |
| **30** | **எங்கள் பக்கம் மக்கள்; மக்களின் பக்கம் நாங்கள்** – மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 03.02.2014 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் மேதகு ஆளுநரின் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது நடைபெற்ற விவாதத்திற்கு அளித்த பதிலுரை | பிப்ரவரி 2014 |
| **31** | மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மாவின் எழுச்சிமிகு உரைகள் – தொகுப்பு–5 (மூன்றாண்டு சாதனைகள் சிறப்பு வெளியீடு) | மே 2014 |
| **32** | மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மாவின் எழுச்சிமிகு உரைகள் – தொகுப்பு–6 (மூன்றாண்டு சாதனைகள் சிறப்பு வெளியீடு) | மே 2014 |

| வ. எண் | தலைப்பு | வெளியிடப்பட்ட மாதம் |
|---|---|---|
| **33** | மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மாவின் எழுச்சிமிகு உரைகள் – தொகுப்பு–3 (மூன்றாண்டு சாதனைகள் சிறப்பு வெளியீடு) (ஆங்கிலம்) | மே 2014 |
| **34** | மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி **அம்மாவின் அமுத மொழிகள்** (மூன்றாண்டு சாதனைகள் சிறப்பு வெளியீடு) | மே 2014 |
| **35** | மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு எழுதிய நேர்முகக் கடிதங்களின் தொகுப்பு (2011–2014) (மூன்றாண்டு சாதனைகள் சிறப்பு வெளியீடு) (ஆங்கிலம்) | மே 2014 |
| **36** | மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு.நரேந்திர மோடி அவர்களிடம் அளித்த கோரிக்கை மனு 03.06.2014 (தமிழ் மற்றும் ஆங்கிலம்) | ஜூன் 2014 |
| **37** | மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் அரசின் மூன்றாண்டு சாதனைகள் (32 மாவட்டங்களின் சாதனைகள் மாவட்டங்கள் வாரியாக தனித்தனி புத்தகங்களாக வெளியிடப்பட்டன). | ஜூலை 2014 |

| வ. எண் | தலைப்பு | வெளியிடப்பட்ட மாதம் |
|---|---|---|
| **38** | அரசு நலத்திட்ட உதவிகள் (தகவல் கையேடு) (தமிழ்) | ஜூலை 2014 |
| **39** | **விதியை மாற்றிய விதி** தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் விதி 110இன் கீழ் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 08.06.2011 முதல் 12.08.2014 வரை வெளியிட்ட அறிவிப்புகள் (தமிழ்) | செப்டம்பர் 2014 |
| **40** | மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மாவின் எழுச்சிமிகு உரைகள் (2011–2012) (நான்காண்டு சாதனைகள் சிறப்பு வெளியீடு) | மே 2015 |
| **41** | மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மாவின் எழுச்சிமிகு உரைகள் (2012–2013) (நான்காண்டு சாதனைகள் சிறப்பு வெளியீடு) | மே 2015 |
| **42** | மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மாவின் எழுச்சிமிகு உரைகள் (2013–2014) (நான்காண்டு சாதனைகள் சிறப்பு வெளியீடு) | மே 2015 |
| **43** | மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மாவின் எழுச்சிமிகு உரைகள் – (2011–2014) (நான்காண்டு சாதனைகள் சிறப்பு வெளியீடு) (ஆங்கிலம்) | மே 2015 |

| வ. எண் | தலைப்பு | வெளியிடப்பட்ட மாதம் |
|---|---|---|
| **44** | மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு எழுதிய நேர்முகக் கடிதங்களின் தொகுப்பு (2011–2015) (நான்காண்டு சாதனைகள் சிறப்பு வெளியீடு) (ஆங்கிலம்) | மே 2015 |
| **45** | மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மாவின் உரைகளில் மலர்ந்த முத்தான கதைகள் (நான்காண்டு சாதனைகள் சிறப்பு வெளியீடு) | மே 2015 |
| **46** | மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மாவின் அமுத மொழிகள் (நான்காண்டு சாதனைகள் சிறப்பு வெளியீடு) | மே 2015 |
| **47** | மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மாவின் நலத்திட்டப் பயனாளிகளின் வெற்றிக்கதைகள் (நான்காண்டு சாதனைகள் சிறப்பு வெளியீடு) | மே 2015 |
| **48** | Awards and Accolades for Tamil Nadu Government (நான்காண்டு சாதனைகள் சிறப்பு வெளியீடு) (ஆங்கிலம்) | மே 2015 |

| வ. எண் | தலைப்பு | வெளியிடப்பட்ட மாதம் |
|---|---|---|
| **49** | மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் அரசின் நான்காண்டு சாதனைகள் (32 மாவட்டங்களின் சாதனைகள் மாவட்டங்கள் வாரியாக தனித்தனி புத்தகங்களாக வெளியிடப்பட்டன) (நான்காண்டு சாதனைகள் சிறப்பு வெளியீடு) | மே 2015 |
| **50** | Tamil Nadu in the Forefront (நான்காண்டு சாதனைகள் சிறப்பு வெளியீடு) (ஆங்கிலம்) | மே 2015 |

**புதிய கட்டடம்**

தற்போது சென்னை, அண்ணாசாலையில் உள்ள எழுதுபொருள் அச்சுத்துறை வளாகத்தில் இயங்கி வரும் தமிழரசு அலுவலகம் மற்றும் அச்சகத்திற்கு, சென்னை, தரமணியில் ரூ.6.23 கோடி மதிப்பீட்டில் புதிய கட்டடம் கட்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் ஆணையிடப்பட்டு கட்டுமானப் பணிகள் நிறைவுறும் தருவாயில் உள்ளது. மேலும், அவ்அலுவலகத்திற்குத் தேவையான நவீன இருக்கை வசதிகள் அமைக்க ரூ.30 லட்சம் நிதி ஒதுக்கீட்டில் பணிகள் நிறைவு பெறும் நிலையில் உள்ளன.

**கணினியிலிருந்து அச்சுத்தட்டு இயந்திரம்**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, தமிழரசு அச்சகத்தை நவீனமயமாக்கிட ரூ.90 லட்சம் மதிப்பீட்டில் சிடிபி (Computer to Plate) இயந்திரம் வாங்கப்பட்டு, தற்போது செயல்பாட்டில் உள்ளது.

**நான்கு வண்ண வெப் ஆப்செட் இயந்திரம்**

முக்கிய பிரமுகர்களுக்கு வண்ணப் பக்கங்களைக் கொண்டு அனுப்பப்படும் தமிழரசு இதழை சந்தாதாரர்களுக்கு அனுப்புகை செய்யும் பொருட்டு ரூ.4.00 கோடி மதிப்பீட்டில் நான்கு வண்ண வெப் ஆப்செட் புதிய இயந்திரம் வாங்கி புதிய கட்டடத்தில் நிறுவப்பட்டுள்ளது.

**தமிழரசு சந்தாதாரர்கள்**

தமிழரசு தமிழ் மற்றும் ஆங்கில இதழ்களின் மொத்த சந்தாதாரர்களின் எண்ணிக்கை 39,260 ஆகும். இதில் 19,928 பேர் ஆயுள் சந்தாதாரர்கள் ஆவர்.

**“இந்த அரசு தூய்மையான, வெளிப்படையான, செம்மையான மற்றும் பொறுப்பு மிக்க நிருவாகத்தை அளிப்பதை இலக்காகக் கொண்டுள்ளது”**

**– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்**
**புரட்சித்தலைவி அம்மா அவர்கள்**

## பொருட்காட்சிப் பிரிவு

கல்லாதவனே என்றாலும் கற்றவர் கூறும் சிறந்த செய்திகளைக் கேட்க வேண்டும்; அப்படிக் கேட்பது, அவனுக்கு நெருக்கடி வரும்போது உற்ற துணையாக உதவும்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி, செயல்படுகின்ற தமிழ்நாடு அரசின் அனைத்துத் திட்டங்கள் குறித்து, அனைத்துத்தரப்பு மக்களும் அறிந்துகொள்ளச் செய்கின்ற அரிய பணியினை, அரசு சார்பில் நடைபெறும் அரசுப் பொருட்காட்சிகள் நிறைவேற்றி வருகின்றன.

கேட்பதைவிட, பார்ப்பது மக்கள் மனதில் எளிதில் பதியும் என்பதால், பொதுமக்கள் குடும்பத்துடன் வருகை தந்து கண்டுகளித்துப் பயன்பெற ஏதுவாக விழாக்காலங்கள் மற்றும் விடுமுறை நாட்களில், மாவட்டத் தலைநகரங்களில் அரசுப் பொருட்காட்சிகள் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் மூலம் நடத்தப்படுகின்றன.

அரசுப் பொருட்காட்சியில் அரசினுடைய திட்டங்கள் சிறப்பான முறையில் விளம்பரப்படுத்தப்படுகின்றன.

கிராமம் மற்றும் நகர்ப்புற மக்கள் அரசுத் துறைகளின் திட்டங்களையும், சாதனைகளையும் அறிந்து கொண்டு, தேவையான தகவல்களைப் பெறுவதுடன், பொழுதுபோக்கு அம்சங்களைக் கண்டுகளித்து, மனநிறைவுடன் தங்களது இல்லத்திற்குச் செல்வதற்கு அரசுப் பொருட்காட்சிகள் வழிவகை செய்கின்றன.

அரசுப் பொருட்காட்சிகளில் மத்திய, மாநில அரசுகளின் பல்வேறு துறைகள், பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள் பங்கேற்கின்றன. இவ்வாறு அரசால் நடத்தப்படும் பொருட்காட்சிகள், மக்களுக்குப் பொழுதுபோக்காக அமைவதோடு, நேரடியாகவும், மறைமுகமாகவும், பலருக்கு வேலை வாய்ப்பை அளித்து வருவது குறிப்பிடத்தக்கதாகும். மேலும், இப்பொருட்காட்சிகளில், நலிந்த கலைஞர்களின் வாழ்க்கை வளம்பெறும் வகையில், கலை நிகழ்ச்சிகள் நடத்த வாய்ப்புகள் வழங்கப்பட்டு வருகின்றன.

அரசுப் பொருட்காட்சி ஆண்டுதோறும் கோயம்புத்தூர், மதுரை, சேலம், வேலூர், திருநெல்வேலி, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, திருவண்ணாமலை, தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களில் நடத்தப்பட்டு வருகிறது. 2015–2016 ஆம் ஆண்டில் அரசுப் பொருட்காட்சி முதன்முறையாக நாகர்கோவிலில் நடத்தப்பட்டுள்ளது.

சிறந்த முறையில், அரசுப்பொருட்காட்சிகளில் பங்குபெறும் அரசுத் துறைகளை ஊக்குவிக்கும் வகையில், சிறந்த அரசுத் துறை அரங்குகள் தேர்வு செய்யப்பட்டு, பரிசுகள் வழங்கப்பட்டுவருகின்றன.இதுவரை,செய்தி–மக்கள்தொடர்புத் துறையால் **165**அரசுப் பொருட்காட்சிகள் நடத்தப்பட்டு, அதன் மூலம் அரசுக்கு, ஏறத்தாழ ரூபாய் **34** கோடியே **1** லட்சத்து **91** ஆயிரம் ரூபாய் நிகர வருவாய் கிடைத்துள்ளது.

கடந்தநான்கு ஆண்டுகளில் அரசுப்பொருட்காட்சிகளில் ஈட்டப்பட்ட வருவாய் மற்றும் பார்வையாளர்கள் விவரம்:–

★ பொருட்காட்சிகளின் மூலம் ஈட்டப்பட்ட வருவாய்
– ரூ.**11.92** கோடி

★ பொருட்காட்சிகளுக்கு வருகை தந்த பார்வையாளர்கள்
– **69,06,822** நபர்கள்

## தனியார் பொருட்காட்சிகள்

தனியாரால், வணிக நோக்குடன், வரைமுறைகளின்றி நடத்தப்பட்டு வந்த பொருட்காட்சிகள், முறைப்படுத்தப்பட்டு, பொதுமக்களின் நன்மைக்காகவும், அதே நேரத்தில் பொழுது போக்கிற்காகவும் உரிய விதிமுறைகள் வகுக்கப்பட்டு, மாவட்டங்களில் தனியார் பொருட்காட்சிகள் முறையாக நடத்த, அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களின் பரிந்துரையின் அடிப்படையில், செய்தி மக்கள் தொடர்புத் துறை மூலம் அனுமதி வழங்கப்பட்டு வருகிறது.

## புதுடெல்லி மலர்ப்பேரணி

இந்தியத் துணைக்கண்டத்தின் ஒருமைப்பாடு, மதநல்லிணக்கம் ஆகியவற்றை வலியுறுத்தும் வகையில், புதுடெல்லியில் ஆண்டுதோறும் நடைபெறும் மலர்ப்பேரணி விழாவில் (Phool Walon Ki Saire), தமிழ்நாடு அரசின் சார்பில், செய்தி மக்கள் தொடர்புத் துறை தொடர்ந்து பங்கேற்று வருகிறது. 2012, 2013 மற்றும் 2014ஆம் ஆண்டுகளில் நவம்பர் மாதம் நடைபெற்ற மலர்ப்பேரணி விழாக்களில் தமிழ்நாடு அரசு பங்கேற்று முதல் பரிசு பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது.

## குடியரசு நாள் விழா அலங்கார ஊர்திகள்

சென்னை மற்றும் புதுடெல்லியில் ஆண்டுதோறும் நடைபெறும் குடியரசு நாள் விழாவில், அலங்கார ஊர்திகள் அணிவகுப்பில் கலந்து கொள்வதும், சென்னையில் நடைபெறும் குடியரசு நாள் விழாவில், அரசின் பல்வேறு திட்டங்களை வெளிப்படுத்தும் வகையில், அலங்கார ஊர்திகள் அணிவகுப்பு நடத்திட, ஒருங்கிணைப்புப் பணிகளை மேற்கொள்வதும், இத்துறையின் முக்கியப் பங்களிப்பாகும்.

சென்னையில் 2012 ஆம் ஆண்டு நடைபெற்ற குடியரசு தின விழாவில், செய்தி மக்கள் தொடர்புத் துறையின் அலங்கார ஊர்தி முதல் பரிசும், 2013, 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் இரண்டாம் பரிசும் பெற்றன. மேலும், 2014ஆம் ஆண்டு, புதுடெல்லியில் நடைபெற்ற அலங்கார ஊர்திகள் அணிவகுப்பில், பொங்கல் விழாவினைச் சித்திரிக்கும் தமிழ்நாடு அலங்கார ஊர்தி முதல் முறையாக, இரண்டாம் பரிசு பெற்றது குறிப்பிடத்தக்கதாகும்.

## தொழில் மற்றும் வர்த்தகப் பொருட்காட்சி

ஒவ்வொரு ஆண்டும், சென்னையில் நடைபெறும், அகில இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சியில், இத்துறை பங்கேற்று, அரசின் கொள்கைகள், நலத்திட்டங்கள், அரசின் சாதனைகள் குறித்த விளக்கங்களை, பொதுமக்கள் எளிதில் அறிந்திடும் வகையிலும், மக்கள் விழிப்புணர்வு பெறும் வகையிலும், விளக்கப்படங்கள் மற்றும் காட்சி மாதிரிகளுடன் தனி அரங்கு திறன்பட அமைக்கப்பட்டு வருகிறது.

## புதுடெல்லி பன்னாட்டு வர்த்தகப் பொருட்காட்சி

புதுடெல்லியில் நடைபெறும் அகில இந்திய பன்னாட்டு வர்த்தகப் பொருட்காட்சியிலும், தமிழகத்தின் சார்பில், இத்துறை ஆண்டுதோறும் பங்கேற்று, தமிழக அரசின் அனைத்துத் துறைகள் தொடர்பான கொள்கை விளக்கங்கள், வளர்ச்சிப் பணிகள் மற்றும் சாதனைகள் குறித்த விளக்கங்கள் வெளிக்கொணரப்பட்டு வருகின்றன.

இப்பொருட்காட்சிகள் பெரும்பான்மையோருக்கு வேலை வாய்ப்புக் கிடைக்க வழி வகுக்கிறது.

## ஒன்றியங்களில் கண்காட்சிகள்

தமிழக அரசின் நலத்திட்டங்கள், சாதனைகள் குறித்துப் பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், தமிழ்நாட்டில் சென்னையைத் தவிர, **31** மாவட்டங்களில் உள்ள, **385** ஊராட்சி ஒன்றியங்களிலும் அரசின் சாதனையை

விளக்கும் வகையில், சிறு கண்காட்சியினை நடத்த, தமிழக அரசு ஆணையிட்டவாறு, ஊராட்சி ஒன்றியத்திற்கு ரூ.10,000/– வீதம், மொத்தம் ரூ.38.50 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, முதற்கட்டமாக 2011–2012ஆம் நிதி ஆண்டில் 97 ஊராட்சி ஒன்றியங்களில் சிறு கண்காட்சிகள் நடத்தப்பட்டுள்ளன. இக்கண்காட்சிகளை, மொத்தம் 4,02,100 மக்கள் பார்வையிட்டுப் பயனடைந்துள்ளனர். இரண்டாவது கட்டமாக, 2012–2013ஆம் நிதி ஆண்டில், 32 மாவட்டங்களின் 89 ஊராட்சி ஒன்றியங்களில் கண்காட்சிகள் நடத்தப்பட்டு, 4,42,310 மக்கள் பார்வையிட்டுப் பயனடைந்துள்ளனர். மூன்றாவது கட்டமாக, 2013–2014ஆம் நிதி ஆண்டில் 32 மாவட்டங்களின் 79 ஊராட்சி ஒன்றியங்களில் கண்காட்சிகள் நடத்தப்பட்டு, 3,98,500 மக்கள் பார்வையிட்டுப் பயனடைந்துள்ளனர். நான்காவது கட்டமாக, 2014–2015 ஆம் நிதி ஆண்டில் 32 மாவட்டங்களின் 63 ஊராட்சி ஒன்றியங்களில் கண்காட்சிகள் நடத்தப்பட்டு, 4,17,100 மக்கள் பார்வையிட்டுப் பயனடைந்துள்ளனர்.

நடப்பு நிதியாண்டில் ஏனைய ஊராட்சி ஒன்றியங்களிலும் சிறு கண்காட்சிகள் நடத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**மாவட்டங்களில் புகைப்படக் கண்காட்சி**

மாவட்டங்கள்தோறும் திருவிழாக்கள், மாண்புமிகு முதலமைச்சர்மற்றும்மாண்புமிகு அமைச்சர்கள்பங்குகொள்ளும் அரசின் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாக்கள்

ஆகியவற்றில், அரசின் சாதனைகள், நலத்திட்டங்கள் குறித்து, பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் புகைப்படக் கண்காட்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

மேலும், தமிழகத்தில் உள்ள 32 மாவட்டங்களிலும், அரசின் திட்டங்கள் மற்றும் சாதனைகளை விளக்கும் புகைப்படக் கண்காட்சிகளை, ஆண்டுதோறும் மாவட்டத் தலைநகரங்களில் நடத்த, தமிழக அரசு ஆணையிட்டவாறு, 2013–2014ஆம் நிதி ஆண்டில் மாவட்டத்திற்கு ரூ.10,000/– வீதம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 32 மாவட்டங்களிலும் புகைப்படக் கண்காட்சிகள் நடத்தப்பட்டன. இந்தப் புகைப்படக் கண்காட்சிகளை, மொத்தம் 3,51,950 மக்கள் பார்வையிட்டுப் பயன்பெற்றுள்ளனர். 2014–2015ஆம் நிதி ஆண்டிலும், 32 மாவட்டங்களில், இப்புகைப்படக் கண்காட்சிகள் நடத்தப்பட்டு, மொத்தம் 6,32,050 மக்கள் பார்வையிட்டுப் பயன்பெற்றுள்ளனர். 2015–2016ஆம் நிதி ஆண்டிலும், 32 மாவட்டங்களில், இப்புகைப்படக் கண்காட்சிகள் நடத்தப்பட்டு, மொத்தம் 6,52,200 மக்கள் பார்வையிட்டுப் பயன்பெற்றுள்ளனர்.

மேலும், அனைத்து மாவட்டங்களிலும், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தலைமையில், கிராமங்களில் நடத்தப்படும், மக்கள் குறை தீர்க்கும் மனு நீதி நாள் முகாம் நிகழ்ச்சிகளின் போதும், சிறிய அளவிலான, பல்துறை பணி விளக்கக் கண்காட்சி முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

**“பொது நலம் போற்றப்படும்.**
**தன்னலம் புறக்கணிக்கப்படும்”**

**– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்**
**புரட்சித்தலைவி அம்மா அவர்கள்**

## மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்கள்

தமிழ்நாட்டிலுள்ள **32** மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்களும், தமிழ்நாட்டின் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் மிக இன்றியமையாத உறுப்பாக விளங்குகின்றன. இவை, அரசின் பல்வேறு வளர்ச்சித் திட்டங்கள், செயலாக்கங்கள், சாதனைகள் மற்றும் அரசின் புதிய அறிவிப்புகளை பயனாளிகளான பொதுமக்களுக்கு, செய்தி இதழ்கள், தொலைக்காட்சி, வானொலி போன்ற ஊடகங்கள் வழியாக விளம்பரப்படுத்தும் பணியினைச் செம்மையுறச் செயல்படுத்தி வருகின்றன.

மாவட்டச் செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்கள் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் பணிகளில் மிக முக்கியமான பங்கை வகிக்கின்றன. அரசு அறிவிக்கும் நலத்திட்டங்களைப் பற்றிய விவரங்கள் மற்றும் அரசின் சாதனைகளைப் பொதுமக்கள் அறியும் வகையில் விளம்பரம் செய்வதுடன், அரசு நலத்திட்டங்களின் பலனைப் பயனாளிகள் முழுமையாகப் பெறுவதற்கு ஏதுவாக, அவற்றைப் பற்றிய விழிப்புணர்வை மக்களிடம் உருவாக்கும் பணியினையும் மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள் மேற்கொண்டு வருகிறார்கள்.

ஊடகங்களுக்கு அரசின் செய்தி வெளியீடுகள் மற்றும் புகைப்படங்களை வழங்குதல், மக்கள் கூடுமிடங்களில் வீடியோ படக் காட்சிகள் நடத்துதல், பத்திரிகையாளர் கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்தல், கேபிள் தொலைக்காட்சிகள் மூலம் விளம்பரப்பணி செய்தல், அரசு விழாக்களை நடத்துதல், பல்துறைப் பணிவிளக்க முகாம்கள் மற்றும் சிறு கண்காட்சிகள் நடத்துதல், நினைவகங்களைப் பராமரித்தல் போன்ற பணிகளை மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள் செய்து வருகிறார்கள்.

## செய்தி நிலையங்கள்

செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் சென்னை, மதுரை, திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், கோயம்புத்தூர், மற்றும் புதுடெல்லி ஆகிய இடங்களில் செய்தி நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. இச்செய்தி நிலையங்களில், மொழி, இலக்கியம், வரலாறு, அறிவியல் உள்ளிட்ட பல்வேறு தலைப்புகளில் நூல்கள் மற்றும் நாளிதழ்கள் மற்றும் காலமுறை இதழ்கள் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக வைக்கப்பட்டுள்ளன.

இச்செய்தி நிலையங்களை ஆய்வாளர்கள், ஆசிரியர்கள், பள்ளி, கல்லூரி மாணவ–மாணவியர் பெரிதும் பயன்படுத்தி வருகிறார்கள்.

# மாநிலச் செய்தி நிலையம், சென்னை

ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் இயங்கி வந்த மாநிலச் செய்தி நிலையம், தற்போது சென்னை திருவல்லிக்கேணி, பாரதியார் இல்லத்தில் செயல்பட்டு வருகிறது. மாநிலச் செய்தி நிலையத்தில் நூலகமும், படிப்பகமும் செயல்பட்டு வருகின்றன.

இந்நூலகத்தில், தலைவர்களின் வரலாற்று நூல்கள், குழந்தைகள் நூல்கள், அறிவியல் நூல்கள், அரசியல் நூல்கள் மற்றும் பல்வேறு தலைப்புகளிலான அரிய நூல்கள் உள்ளன. இது தவிர சட்டமன்றப் பேரவை நடவடிக்கைக் குறிப்புகள், பேரவை வெளியீடுகள், அரசுத்துறை வெளியீடுகள் ஆகியவை இங்கு மேற்கோள் தொகுப்புப் பணிக்காக பராமரிக்கப்பட்டு வருகின்றன. மாநிலச் செய்தி நிலையத்திலுள்ள படிப்பகத்தில் தமிழ், ஆங்கில நாளேடுகள், வார, மாத மற்றும் காலமுறை வெளியீடுகள் வாங்கப்பட்டு பொதுமக்கள் படிப்பதற்கு வசதி செய்யப்பட்டுள்ளது. இங்கு நாள்தோறும் ஏராளமானோர் வருகை தந்து படித்துப் பயன்பெறுகிறார்கள்.

இங்கு சேகரித்து வைக்கப்பட்டுள்ள காலமுறை வெளியீடுகள் மற்றும் நாளேடுகளில் இருந்து செய்திகள், அரசின் மேற்கோள் பணிக்காகத் தேவைப்படும் பொழுது வழங்கப்படுகின்றன. மேலும், செய்தி மக்கள் தொடர்புத் துறை நடத்தும் அரசு விழாக்களுக்குத் தேவையான குறிப்புகள், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மற்றும் அரசின் உயர் அலுவலர்கள் ஆகியோருக்கு மேற்கோளுக்காகவும் தரப்படுகின்றன. தமிழரசு இதழுக்குக் குறிப்பு எடுத்துக்

கொள்ளத் தேவையான நூல்களும், தகவல்களும் மாநிலச் செய்தி நிலையத்திலிருந்து வழங்கப்படுகின்றன.

**புத்தகப்பதிவு**

செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர், 1867ஆம் ஆண்டு பத்திரிகைகள் மற்றும் புத்தகங்கள் பதிவுச் சட்டப்படி, புத்தகப் பதிவாளராகவும் செயல்படுவதால், ஆண்டுதோறும் வெளியிடப்படும் புத்தகங்களில் இரண்டு பிரதிகள் பெறப்பட்டு, முறையாகப் பதிவுச் செய்யப்பட்டு வருகின்றன.

**மாநிலச் செய்தி நிலையத்திற்குப் புதிய கட்டடம்**

சென்னை ஓமந்தூரார் தோட்டத்தில் புதிய கலையரங்கத்திற்கு அருகில் ரூ.2 கோடி மதிப்பீட்டில் செய்தி நிலையம் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

# நிறைவுரை

**"அமைதி, வளம், வளர்ச்சி"**

**– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்**
**புரட்சித்தலைவி அம்மா அவர்கள்**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் சிந்தையில் உதித்து சீர்பட நிறைவேற்றப்படும் திட்டங்கள் அனைத்தும் தமிழக மக்களின் வாழ்வு வளம் பெறவும், சிறப்புறவும் அமைய வேண்டும் என்பதையே நோக்கமாகக் கொண்டுள்ளன. மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களது தலைமையிலான அரசு செயல்படுத்தும் மக்கள் போற்றும் திட்டங்களையும், சாதனைகளையும் மக்களுக்கு எடுத்துச் செல்கின்ற மகத்தான பணியை செய்தி – மக்கள் தொடர்புத்துறை தொடர்ந்து திறம்பட ஆற்றும்.

**கே.டி. ராஜேந்திரபாலாஜி**
**செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள்**
**செயலாக்கத்துறை அமைச்சர்**

# இணைப்பு–1

**வரவு செலவுத் திட்ட மதிப்பீடு 2015–2016**

**நிகர செலவு**
**(ரூபாய் ஆயிரத்தில்)**

| | | 2013–2014 கணக்குகள் | 2014–2015 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு | 2014–2015 திருத்த மதிப்பீடு | 2015–2016 வரவு செலவுத் திட்ட மதிப்பிடு |
|---|---|---|---|---|---|
| 2059 | பொதுப் பணிகள் | 1,85,32 | 75,01 | 75,01 | 75,01 |
| 2220 | செய்தி மற்றும் விளம்பரம் | 98,60,38 | 61,84,16 | 106,67,87 | 61,31,03 |
| 2235 | சமூக பாதுகாப்பும் நலனும் | 56,08 | 60,47 | 60,47 | 60,47 |
| 2250 | ஏனைய சமூகப்பணிகள் | 9,69 | 10,85 | 11,02 | 11,86 |
| 4220 | செய்தி விளம்பரம் குறித்த மூலதனச் செலவு | 85,66 | 1 | 6,50,00 | 4,00,00 |
| | **மொத்தம்** | **1,01,97,13** | **63,30,50** | **1,14,64,37** | **66,78,37** |